
உ

சிவமயம்

வடநாட்டுத் தலப்பயணச் சிந்தனை




34-1

முன்னுரை

தக்காரும் தாழ்விலாச்செல்வரும் நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும், மதுரை நகரில் அறநெறி அண்ணல் அருளாளர் திரு. **லெ.நாராயணன்செட்டியார்** அவர்கள் செய்த அரும்பணிகளில் அ/மி ஸ்ரீமீனாட்சிசுந்தரர் கோயில் குடமுழுக்குப் பணி உச்சமாகும், ஆலை அரசராக இருந்து பலரை வாழ்விக்கவந்த பேரருளாளர். சரசுவதிநாராயணன் கல்லூரி நிறுவி வாழ்வித்த பின்தங்கியமக்கட்கு கல்விக்கண்திறந்த பெரும் பணியும், அவ்வழியில் அவரது திருமகனார். **லெ.நா.தியாகராசன்செட்டியார்** அவர்களை அறம்புரியச் செய்த தொண்டும், தருமையாதீனக் குருமணிகளிடம் சிவதீட்சையும், சிவபூசையும் எடுக்கச்செய்து வழிப்படுத்தியும் அரியசெயலைச்செய்ததோடு, காசிமடத்து கயிலை மாமுனிவர்களோடு வடநாட்டுத்தல யாத்திரை கொள்ளச் செய்தும் தம் ஆலைமக்கட்கு பெரியபுராணம் உரைகேட்க மாதந்தோறும் ஏற்பாடு செய்த செயல்கள் வணக்கத்திற்குரியவை. அச் செயலில் முன்நின்று அப்பணிகளைச் செய்த திரு. **தியாகராசன்செட்டியார்** அவர்களோடு, அடியேனும் வடநாட்டு யாத்திரை செய்த அனுபவங்களை, காசிமடம் கயிலை மாமுனிவர் அருளால் ஸ்ரீகுமரகுருபரர் இதழில் வெளியிட்டருளியதை இன்று, **"வடநாட்டு யாத்திரை" நூலாக** தம்பெற்றோர் நினைவாக திரு. **நா.தி. அவர்கள் வெளியிடுகிறார்கள். "சிறிய பெருந்தகையார்"** என்று தருமைக் குருமணிகளும், கயிலை மாமுனிவர் அவர்களும் பாராட்டி, ஆசி வழங்கிய அவரது அருட்பணி மேலோங்கி வளர திருவருளை வேண்டுவன்.

தருமை ஆதீனப் புலவர்
வித்துவான்
தா.குருசாமி தேசிகர்



வடநாட்டுத் தலப்பயணச் சிந்தனை

குருவருள்

"குருவருளின்றித் திருவருள் கூடா" என்பது தருமையாதீன மரபு வழிபட்ட சிந்தனை. தருமையாதீனத்தில் இஞ்ஞான்று எழுந்தருளிச் சிவம்பெருக்கித் தவம் வளர்க்கும் செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்திகளாகிய குருமகாசந்நிதானம் அவர்களின் முதல் ஞாயிறு உபதேசத் தொடக்கால் ஆட்பட்ட எளியேன், தலப்பயணச் சிந்தனையே இல்லாமல் இருந்தேன். அவ்வப்போது குருமணிகளுடன் வாய்ப்பு நேரும்போது சோழநாட்டுத்தலங்கள் பலவற்றைத் தரிசித்துள்ளேன். இதுவும் எளியேன் விருப்பப்படி அன்று. குருமூர்த்திகளின் கடாட்சத்தால் அவ்வப்போது நிகழும்.

எல்லாத் தலப்பயணங்களும் முதல் ஞாயிறு உபதேசத்துக்கு இடையூறு இல்லாமல் அமைவதே என்கடனைகப் பார்த்துக் கொள்வேன். ஒருமுறை ஆதீனவளாகம் வந்தும், சுரநோயால் உபதேசம் கேட்க முடியாமற்போனது. எனினும் குருவின் உள்ளத்தால் அடியேன் நினைவுறும் பேறுபெற்றேன். அதுபோல வடநாட்டுத் தலப்பயணம் என் முதல் ஞாயிறு உபதேசத் தொடக்கத்திற்கு இடையூறாய் அமைவதை அறிந்து, போகாதிருக்க குருவடி போற்றி விண்ணப்பித்தபோது - யாத்திரை செய்ய எண்ணியபடி செய்து முடிப்பாயாக - என்று ஆணையிட்டு ஆயிரம் வழங்கி ஆசியருளினார்கள். குரு ஆசியோடு யாத்திரை நிகழ்வதாயிற்று. இனி, சம்பவங்களுக்கு வருகிறேன்.

"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் எனப்படும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் யாத்திரை செய்வதில் "**சக்கரவர்த்தி**" எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களோடு யாத்திரை சென்று வந்தவர்களிடம் உசாவி மகிழ்வேன். கயிலை சென்று வந்த அவர்களைத் தருமைக் குருமணிகள் "கயிலை மாமுனிவர்" என்று சிறப்புப் பட்டம் வழங்கி ஆசிபெற்ற சுவாமிகளின்

நிகழ்வும், பணியும் ஒருசிறிது அறிந்தேன் ஆதலின் மணிவிழாக்கண்ட சுவாமிகள் வடநாட்டுத் தலயாத்திரை நேபாள் வரை நிகழப் போவதாகக் கேள்விப்பட்டேன். இதனை மதுரைத் தொழிலதிபரும், மதுரை ஸ்ரீமீனாட்சிசுந்தரர் கோயிலை 1974-ல் தலைமையேற்றுப் பெருந்திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்தவரும். கல்விப் புரவலரும். பொதுப்பணிகளில் நான் என்று மதுரையில் மார்தட்டி முன்வரும் பெரியாரும், கருமுத்து தியாகராசச் செட்டியார் மருகருமான திரு. லெ.நாராயணன்செட்டியார் அவர்களின் இரண்டாவது திருமகனார் திரு. நா.தியாகராசச் செட்டியார் மகா சந்நிதானமவர்களிடம் ஈடுபாடு கொண்டவர்கள். அவர்களோடு சோழநாட்டுத் தலங்கள் பல தரிசனம் செய்யும்பேறு கிட்டியது. அவர்களிடம் ஆதீனச் செய்திகளைச் கூறிச் செவிப்படுத்தினேன்.

"அப்படியானல் நாமும் சென்று வரலாம் - கடிதம் எழுதி விவரம் கேட்கும்படி சிறியபெருந்தகையராகிய நா.தியாகராசச் செட்டியார் அவர்கள் கேட்டுக்கொண்டபடி கடிதம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் எஜமான் சுவாமிகட்கு என்னால் எழுதப்பட்டபடி 18.9.91 சென்னையில் டில்லி - தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் புறப்பட்டு அரித்துவார் வழியாக யமுனோத்திரி, கங்கோத்திரி, கேதாரம், பத்ரி, நேபாளம், ஸ்ரீகாசி முதலிய இடங்கட்குச் செல்ல முடிவாகி அன்பர்களும் ஒதுக்கீடு பெற்று நிறைவாகிவிட்டது - எனினும் வருவதாயிருப்பின் உடன் எழுதும்படி கடிதத்தில் உத்திரவாயிற்று, மறு தபாலிலேயே நா.தியாகராசச்செட்டியார் அவர்களின் விருப்பினை அவரும் அடியேனும் வருவதாக எழுதிப்போட்டு விட்டேன். மீண்டும் தருமையிலே லெ.நாராயணன் செட்டியார், நா.தியாகராசச் செட்டியார் அவர்களுடன் திருக்கடவூர் சென்றுவிட்டு குருதரிசனம் செய்யும்போது ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகளும் அப்போது வாய்ப்பாக ஆதீனத்துக்கு எழுந்தருளியிருந்தார்கள். நாங்கள் தரிசனம் செய்தபோது வடநாட்டுப் பயணத்திற்கு வேண்டிய ஒதுக்கீடுகள் (Reservation) செய்யப்பட்டுவிட்டதாக ஆசியருளி பயணத்திற்குத் தயாராக 18.9.91ந் தேதி சென்னை வந்து சேரும்படி பணித்தார்கள்.

தாயுடன் குழந்தைகள் செல்வதுபோல் இப்பயணம் எஜமான் சுவாமிகளுடன் செல்வது அமையும் என்று அவர்களுடன் சென்று வந்தவர்கள் கூற ஒருவாறு களிப்படைந்தேன். எளியேனுக்குத் தலப்பயணம் செய்யவும் ஆசை. முதல் ஞாயிறு உபதேசம் தவறாமல் செல்லவேண்டும் என்பதும் ஆசை பெரும்பொருட் செல்வாகும் என எண்ணித் தவிர்த்துக் கொள்ளவும் ஆசை; "இரட்டுறமனம் வையேல்" என்பது திருமுறை வாக்கு. ஒருபகுதி தொகை நா.தியாகராசச் செட்டியார் அவர்கள் வழங்குவதாக வாக்களித்தவுடன் தான் வடநாட்டுத் தலப்பயணம் என்னைப் பொறுத்தவரை கலைகட்டுவதாயிற்று ஆம்! குருவருள் கூட திருவருள் கூடியது. குருவருளுடன் திருவருளைப் பெறுவதற்கு 19.9.91ந் தேதி எங்கள் யாத்திரைக் குழுவினரில் ஒருவரான திரு இலிங்கமராஜா தமது குடும்பத்துடன் ஆலவாயண்ணலை முழுக்காட்டி அங்கயற்கண்ணியின் பேரருளைப் பெற்றனர். உடன்பணி செய்து யாத்திரை வெற்றிபெறப் பிரார்த்தி அவருடன் வணங்கினோம்.

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள் யாத்திரை செய்வதில் சிறந்தவர்கள் என்று எங்கள் தருமையாதீனக் குருமணிகள் நேரில் அடியேன் தரிசனம் செய்தபோது அருளிய திருவார்த்தைகளாகும். மதுரை, நா.தியாகராசச்செட்டியாரையும் தவறாது அழைத்துக் கொண்டு யாத்திரையை முடித்து வரும்படி ஆணை தந்ததோடு என் வழக்கமும் நியமமுமான 6.10.91ந் தேதி முதல் ஞாயிறு ஆதீன குரு தரிசனமும் உபதேசமும் தவிர்வதை நினைத்து அடியேன் போவதை அந்நாளில் மட்டும் திரும்பும்படியாக அமைத்துக்கொள்ளத் திட்டமிட்டபோது யாத்திரையில் ஆசை வைத்துவிட்டு, முதல் ஞாயிற்றிலும் ஆசைவைப்பது முறையன்று, ஏதாவது ஒன்றை இழந்துதான் ஒன்றைப்பெற வேண்டும் என்று யாத்திரை எண்ணத்தை வழிப்படுத்தி விடைகொடுத்தார்கள்.

விடை மட்டும் கொடுக்கவில்லை உன் தோழர் நா.தியாகராசச் செட்டியார் அவர்களிடம் "இந்தச் செய்தியையும் சொல்" என்று செவியறிவித்தலும்

வழங்கினார்கள். "உள்ளும் புறமும் ஒத்த தன்மையராக இருக்க வேண்டும்; ஒருவரை நேரில் சந்திக்கும்போது நிகழ்த்தும் மரியாதைபோல, இல்லாத நேரத்தும் மரியாதை செலுத்துதல் சமய அனுபவமுடையவர்க்கு வேண்டத்தக்கது; ஏதாவது ஒன்றினை விட்டால்தான் மற்றொன்றனைப்பற்ற முடியும், இல்லறத்தை விட்டால்தான் துறவறம்; எல்லாம் வேண்டும் என்றால் ஒன்றும்கிட்டா; காவிரிநதி சிவநெறியை வளர்த்தது; அதன் நீரினைச் சோழர்கள் குடித்ததன் பயனுகைத்தான் சோழர்கள் மறந்தும் மணிகண்டன் நெறியில் இருந்து பிறழவில்லை. வைகைநதி ஒருவனையே பற்றி வாழ ஏடு எதிரேறிச் சென்ற சம்பவம் விளக்கம் செய்யும்; கயிலையைத் தில்லையில் வைத்து திருமூலர் சுந்தரர் வரலாற்றில் சேக்கிழார் விளக்கம் செய்வார் - என்பதை போன்ற தொடர் உபதேசம் அன்று கிட்டியது.

மதுரையில் இருந்து முன்னாகவே நா.தியாகராசச்செட்டியார் அவர்கள் சென்னை பயணமாகிவிட்டார்கள். என் பயணம் 16.10.91ந் தேதி சோமவாரத்தன்று. ஸ்ரீசொக்கநாதசுவாமி அங்கயற்கண்ணி திருவருட் பிரசாதத்தோடு இரவு தருமையாதீனத்துக்கு 17.9.91ந் தேதி காலை வந்து குருமகா சந்நிதானம் அவர்களின் பூஜை முடிந்தவுடன் தரிசித்து திருவருட் பிரசாதத்தை வணங்கி ஆசி பெற்றேன். அப்போதுதான் செவியறிவுறு உபதேசங்கள் பெற்றேன். அன்று பகல் பல்வேறு பணிகளுக்கிடையே சிறிது இடைவெளி கிட்டும் போதெல்லாம் குருதரிசனம் செய்து திருவார்த்தைகள் பெறும் பேறும் பெற்றேன். அன்று இரவு திருவள்ளுவர் 10மணி வண்டிக்குச் சீட்டு வாங்கிவிட்டேன் என்ற செய்தியை விண்ணப்பித்தவுடன், மாலை பூஜை மட தரிசனம் முடிந்தவுடன் எளியேனை அழைத்து தன்னீறு எனக்கருளித் தன் கருணை வெள்ளத்தின் சான்றாக ஓராயிரம் ரூபாய் ஈந்தருளி, சிறப்பாக யாத்திரையை முடித்துவா செட்டியார் அவர்கட்கும் உதவியாக இருந்து பணிசெய்து வா என்ற கட்டளையைத் தலைமேற் கொண்டு, வணங்கியபடி தருமையாதீன நினைவுடன் மயிலாடுதுறை வந்தேன். இரவு 10 மணி வண்டியில் திட்டமிட்டபடி சென்னைப் பயணம் நிகழ்ந்தது. கோளறு பதிகம்

ஓதினேன். மகாசந்நிதானம் அவர்களின் உத்திரவுப்படி வைத்தீசுவரன் கோயில் சீர்காழி, சிதம்பரம் முதலிய தலங்களைப் பேருந்து அடையும்போது அவ்வத்தலப் பதிகங்களை தெரிந்த மட்டும் மனதில் ஓதிவழிபட்டேன். இது ஒரு முதல் ஞாயிறில் கிட்டிய உபதேசம். அதன்படி இயன்றவரை செய்து சிதம்பரம் வரை முயன்று முடித்தேன். பின் உறக்கம் மறுநாள் 18.9.91 காலை 5 மணி தாம்பரம் வந்ததை அறிந்து விழித்துச் சைதாப்பேட்டையில் இறங்கி உஸ்மான்சாலை தருமை ஆதீன சமயப்பிரசார நிலையத்தை வந்து சேர்ந்தேன்.

தருமையாதீனக் குருமணிகள் இச் சமயப் பிரசார நிலையத்தில் பல்லாண்டுகள் இருந்து தவப்பணி செய்த இடம். "சுற்றிவந்தும் சுங்கத்துறையில் மீண்டும் சேர்வதுபோல" என்று அருளுவதற்கு ஏற்ப, தருமையாதீன மகாசந்நிதானம் அவர்களின் நினைவு மிகுவதற்கு சமயப்பிரசார நிலைய இடமும் சிறப்பாக உதவிற்று. அன்றைய பூசையினைச் செய்து வழிபட்டேன். நிலையத்தில் சங்கீத பூஷணம் திரு சாமி. தண்டபாணி அனைவரையும் வரவேற்று உபசரித்தார்கள். அவர்களின் இளவல் திரு சாமி.முருகேசன் சிற்றுந்தில் கொண்டுபோய் மகாசந்நிதானம் அவர்களின் அன்பிற்குப் பாத்திரமான என் தோழர் நா.தியாகராசச் செட்டியாரிடம் விட்டு அவர்களைக்காண உதவினார், சென்னை பெசன்ட் நகர் வளமலையில் கண்டு குருதரிசனம் செய்துவந்த விவரங்களையும், திருவார்த்தைகளையும் நா.தி.அவர்களிடம் தெரிவித்து மகிழ்ந்தேன். அவர்களோடு மதியம் உணவு உண்டேன். அன்று மாலை 5-45க்கு சென்னை சென்ட்ரல் தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் செல்வதற்கு வேண்டியாடி தயாரானோம். கயிலை மகாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகளும் திருப்பனந்தாளில் இருந்து புறப்பட்டு மாலை 4.00 மணிக்கு சமயப் பிரசார நிலையத்திற்கு எழுந்தருளியனார்கள். அனைவரும் வணங்கினோம். நீறு பெற்றோம் நா.தியாகராசச் செட்டியார் அவர்கள் காரில் அடியேனும், மற்ற அன்பர்கள் வெவ்வெறு காரிலுமாகப் புடைசூழ கயிலை மாமுனிவர் காருக்குப் பின்பு விரைந்து சென்று சென்ட்ரல் நிலையத்தை அடைந்து ஒதுக்கீட்டின்படி

பயணம் தொடங்கினோம், புகைவண்டி சென்னையை விட்டுப் புறப்பட்டவுடன் பதிகம் ஓதினோம். குருவருள் கூடிய திருவருள் துணையோடு வண்டி சென்று கொண்டிருந்தது. எங்கள் வண்டியில் அரகர முழக்கம் வந்தவுடன் வழியனுப்பிய அனைவரும் கயிலைமாமுனிவரை வணங்கித் திருநீறு பெற்றனர்.

கயிலைமாமுனிவர் அவர்களோடு வடதிசைப் புனிதப் பயணத்தில் அவர்களுடன் உடனுறை வந்தவர்களில் சிதம்பரம் மௌனமடம் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர்கள் சென்னை டாக்டர் திரு இனியசிவம், பண்ணுருட்டி டாக்டர் சென்னை திரு. ஜிவரத்தினம் குடும்பத்தினர், செம்பொனார் கோவில், ஆதீன அன்பர் திரு இரத்தினசாமி உடையார் மனைவி திருமதி சகுந்தலா அம்மையார், திருவண்ணாமலை வழக்கறிஞர், சிதம்பரம் திரு. வேதரத்தினம், திருச்செந்தூர் ஸ்ரீசுந்தரம் ஐயர், மதுரை சோமசுந்தரஓதுவாமூர்த்தி, குடந்தை திரு காங்கேயம் பிள்ளை முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பனசை திரு குமாரசாமிபிள்ளை உணவின் பொருட்டு எங்களுக்காகவே உடனுறை அழைத்து வரப்பட்டவர்.

பகலில் பிராயண அலுப்பு காரணமாக அன்று இரவு கிட்டிய உணவைக் கொண்டு கடமைகளை முடித்து உறங்கி விட்டோம். வண்டி சென்று கொண்டே இருந்தது. வண்டி ஆந்திராவின் எல்லையைக் கடந்து கொண்டிருக்கும்போது விடிந்துவிட்டது. கயிலைமாமுனிவர் சுவாமிகளும் விரைந்து நீராடி பூசனைகள் முடித்து விட்டார்கள். அவர்கள் வழிப்படுத்தியபடியே பிறகு நீராடி முடித்தேன். முதல் வகுப்பில் நா.தியாகராசச்செட்டியார் அவர்களும், அவர்கட்கு எதிரில் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த இளம் தம்பதியரும் பயணம் செய்தனர். அடுத்த அறையில் சுவாமிகள் எழுந்தருளியிருந்தனர். அடியேன் பஞ்சாட்சரப் பதிகங்கள் அனைத்தையும் பாராயணம் செய்தேன். சிவபுராணம் ஓதப்பட்டது. தக்க சமயத்தில் திருச்செந்தூர் ஸ்ரீசுந்தரம் ஐயர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி இலை விபூதியுடன் வந்து நா.தியாகராசச்செட்டியார் அவர்கட்கும், இளம் தம்பதியர்கட்கும் நீறு வழங்கினார்கள். மிகவும்

பணிவுடன் எழுந்து அவ்வடநாட்டுத் தம்பதியர் நீறு பெற்று வணங்கி ஆசிபெற்றனர். மொழி தெரியாவிட்டாலும் தேவார ஓசையைக் கேட்டு இன்னும் "பஜனை" செய்யுங்கள் என்று அத்தம்பதியர் வேண்டியது குறிக்கத்தக்கது வடநாட்டவரின் பணிவும் பக்தியும் வியப்பைத்தந்தது. பின்பு கயிலை மாமுனிவரவர்களின் திருமுன்பு சென்று "அது பழச்சுவைப்பாடல்" ஓதி காலை நீறும் ஆசியும் நா.தி அவர்களுடன் பெற்றேன். எஜமான் பின்பு பள்ளி எழுச்சி பாடுவது பொருத்தமாகா, எனினும் வேண்டற்குறிய கருத்து விடிந்தஉளதுபொருத்தமே - என்று திருவாய் மலர்ந்து இடர்களையும் பதிகங்களை ஓதப்பணித்தார்கள். பதிகங்களை ஓதி ஓய்ந்தோம். காலை உணவு முடிந்த பின்பு வண்டியில் அனைவரும் ஒன்று சேர்ந்து நா.தியாகராசச்செட்டியார் அவர்களுடன் கயிலை மாமுனிவரவர்களின் ஆணைப்படி செம்பொருட் சிந்தனை செய்தோம்.

சிறிய பெருந்தகையார் நா.தியாகராசச்செட்டியார் அவர்கள் தமது தந்தை தாய் பெயரில் மதுரை நகரில் முதல் நகரமாய் இயங்கும் சரசுவதி நாராயணன் கல்லூரியின் செயலாளர், அக்கல்லூரியின் முகப்பில் கலைமகள் உருவமும் கீழே "ஆயகலைகள் அறுபத்து நான்கும்" என்ற வெண்பாவும், அதற்கடுத்த படியாக "அகர முதல", "கற்றதனால் ஆயபயன் என்கொல்" என்ற குறள்களும், அதற்கு அடுத்தபடியாக பட்டினத்தார் பாடிய


"ஓடாமல் பாழுக் குழையாமல் ஓரம்உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம் கூடாமல் வெங்கோபம் நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல் இன்றைக்கு நாளைக்கென்று
தேடாமல் செல்வம் தருவாய் சிதம்பரதேசிகனே"

என்ற பாடலும் அமைந்திருப்பதை அன்பர்களிடம் நினைவு கூர்ந்தேன்.

கல்விப் புலவர்கள் - கல்வி வள்ளல்கள் - கல்வித்துறையினர் அதிகமாகக் கவலைப்படாத நல்லவர் கூட்டத்தை நா.தியாகராசச்செட்டியார் அவர்கள் விரும்புவதையும் கல்லூரிக்கென எவ்வித இறும் கொடையும் மாணவரிடம் பெறாது முதல்தர கல்லூரியாக

அவர்கள் நடத்துவதற்கும் காரணம் இந்தப் பட்டினத்தார் பாட்டுத்தான் என்று பீடிகை போட்டு பாட்டைப் பைரவி ராகத்தில் பாடி முடித்தேன். நா.தியாகராசச்செட்டியார் அவர்கள் புகழ்ச்சியை விரும்பாத காரணத்தினால் பாட்டின் பொருளை மட்டும் சிந்திக்கும்படியாயிற்று.

மனித வாழ்க்கை புனித வாழ்க்கையாக மலரப் பட்டினத்தார் வழங்கிய சிந்தனையை இன்று எந்தக் கல்லூரி தன் (EMBLEM) குறிக்கோளாகக்கொண்டுள்ளது? கயிலை மாமுனிவரோடு புனிதப்பயணம் நடத்தவதற்கு முன்னை நாளில் தவம் செய்திருக்க வேண்டும் என்ற சிந்தனையோடு வட்டமிடும் வேளையில் விந்திய மலையை எங்கள் வண்டி கடந்து கொண்டிருந்தது. மத்தியப்பிரதேசத்தில் உள்ள இம் மலை மிகவும் வளமானது. தேக்கு மரங்கள் வானளாவி விளங்கின. ஓடைகள் கால்வாய் வனப்பைக் காட்டின. கந்தபுராணச் சிந்தனையில் விந்திய மலை பங்கு கொள்வதையும் நினைவு கூர்ந்து வணங்கினோம். நண்பர்கள் வேதரத்தினம், பெரியவர் காங்கேயம் பிள்ளை முதலியவர்களும் கயிலைமாமுனிவர் அவர்களை வணங்கி நா.தியாகராசன் அவர்களோடு மாலையில் உரையாடினர். இரவு வந்தவுடன் வழக்கப்படி உண்டு முன்சவட்டியே படுத்து உறங்கினோம். விடியும் நேரம் டில்லியை அடைந்தோம்.



யமுனோத்திரி நீராடல்

ஒரு யாத்திரையின் முடிவில் நிகழ்கின்ற செயல் பதினைந்து நிமிடமாக இருந்தாலும், அதற்காகப் பயணப்படுகின்ற முயற்சியும், அதனால் ஏற்படுகின்ற இன்பதுன்ப அனுபவங்களும்தான் முக்கியமானவை. இமயமலை. அதுவே ஒரு தனி உலகமாக இருந்தது. மழையில் நனைந்து கொண்டே சின்ன சட்டியில் தங்க இடம்தேடி அகர்வால் தர்மசாலையில் கிட்டாமல் வேறு வழியின்றி தர்மசாலை முகப்பிலேயே தங்க வேண்டியதாயிற்று, அந்த அளவில் இடங் கொடுத்ததே பெரிது என்று நினையும்படி ஆயிற்று.

கயிலை மாமுனிவர் அவர்கள் தங்குமிடத்தின் முகப்பில் படுக்கையை விரித்து நித்திரை செய்து காட்டி வழிப்படுத்த, அனைவரும் ஒருசேர அங்கு உறங்கும்படி ஆயிற்று. குளிர் மிகுதியாக இருந்தாலும், தர்மசாலையினர் வாடகைக்கு கொடுத்த கம்பளிப் போர்வை அக்குளிரினைத் தாக்குப் பிடித்தது. என்னிடம் நா.தி. அவர்கள் “காரிலேயே இராப் பொழுதைக் கழித்து விடலாம். தர்மசாலை வெளி முற்றத்துக் குளிர் தாங்காது” என்று கூறி தன்னிடமிருந்த போர்வை தலையணைகளில் ஒவ்வொன்று எனக்கும் தந்து உட்கார்ந்தபடியே காரில் தூங்கும் படியாகப் பணித்தார்கள்.

எங்கள் கார் ஓட்டி ஒரு கர்மயோகி. எங்களுக்குப் புகைப் பழக்கம் இல்லை என்பதும், பாராயணம், பாட்டு முதலியன இசைத்துப் பயணப் பொழுதைப் பயனுடைய பொழுதாக ஆக்குவதையும் அறிந்த காரோட்டி, காருக்குள் புகை பிடிப்பதைத் தவிர்த்து, மரியாதை காட்டியதோடு மட்டுமின்றி, காருக்குள்ளேயே தங்குவதற்குச் செய்த முடிவை அறிந்தவுடன் முகம் சுளிக்காமல், தாம் முதல் சீட்டில் படுத்துக் கொண்டு எங்களுக்கு அமர்ந்தபடி உறங்க நாங்கள் பயணப்பட்ட இரண்டாவது சீட்டையே மனமுவந்து வழங்கிய வள்ளலை வாயார வாழ்த்தியபடியே இரவுப் பொழுதை அமர்ந்து உறங்கிக் கழித்தோம். காரோட்டிகள் காருக்குள் யாரையும் தங்க அனுமதிப்பதில்லை.

22.10.1991 காலைப் பூசையை யமுனோத்திரியில் மூழ்கி வைத்துக்கொள்ளலாம் என்ற நினைவுடன், காலை 6 மணிக்கு கயிலை மாமுனிவர் அவர்களின் காரினைப்பின் தொடர்ந்து எங்கள் காரும் சென்று ஹனுமான் சட்டி என்ற இடத்தில் இறக்கிவிட்டது. இங்கிருந்து யமுனோத்திரி 13 கிலோ மீட்டர்.

யமுனோத்திரி என்பது யமுனா நதியின் உற்பத்தி ஸ்தானம், குதிரைகள் மூலமாகவோ அல்லது நடந்து சென்றோ இந்த இடத்தை அடையலாம். குதிரைகள் ஏற்பாடு செய்திருந்தபடி குதிரை மூலமாக மலை ஓரமாகச் சென்று பல மலைகளைக் கடந்து, பல ஏற்ற இறக்கங்களை நீங்கி எங்கள் குதிரைகள் சென்று கொண்டிருந்தன. குதிரைக்காரர்கள் மிகவும் நாணயமானவர்கள். அவர்கள் நடந்து குதிரைக்கு வழிகாட்ட குதிரை எங்களைச் சுமந்து சென்றது குதிரைக்காரர்கள் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட நாங்கள் அந்த நீண்ட நெடிய வழியில் அதல பாதாளத்தின் நீர்மோதிச் செல்லும் யமுனை ஆற்றின் அகண்டாகரக் காட்சியைப் பார்த்த வண்ணம், அச்சந்தரத்தக்க, ஆனால் எவ்விதத் துன்பமும் ஏற்படாத நிலையில் பயணம் நிறைவடைந்தது. யமுனை அலகாபாத்தில் கங்கையில் கூடி ஒன்றி விடுகிறது.

யமுனை உற்பத்தி ஸ்தானத்தில் யாரும் குளிக்க முடியாது, அந்நீர்வெகு வேகமாகப் பாய்ந்து வந்தாலும் அனைத்தும் பனிக் கட்டிகள் உருகிய நீர், பக்கத்திலுள்ள வெந்நீர் ஊற்றினையே அனைவரும் தீர்த்தமாகப் போற்றி நீராடுகின்றனர், அவ்வூற்றிலேயே நாங்கள் நீராடிப் பூசனை முடிந்தோம்.

“சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே”
“என்று அப்பர் தேவாரம் கூறும், அதனால்
இறைவனுக்கும் தீர்த்தன்” என்ற பெயரைத்
திருமுறையில் காணலாம்



யமுனை உற்பத்திஸ்தானத்தில் சிறு குடில்போன்ற அமைப்பு உள்ளது. அங்கு யமுனாதேவி உள்ளது. இங்கு சிதம்பரம் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பூசை செயதார்கள். அங்கேயே நாங்களும் பூசனையை முடித்தோம். கயிலை மாமுனிவர் அவர்களுடன் யமுனா தேவி வழிபாட்டைச் செய்தோம். அருவிக்கரை ஓரத்திலுள்ள உணவு விடுதியிலேயே காலை உணவையும் சேர்த்து நாங்கள் 2.00 மணிக்கு முடித்தோம். அவ்விடத்திற்கே குதிரைக்காரர்கள் எங்களை அடையாளம் தெரிந்து மீண்டும் திரும்புவதற்கு நேரமாகிறது என்று சுட்டிக் காட்டி அழைத்து யாரையும் எதிர்பாராமல் ஏற்றிக் கொண்டு திரும்புகின்றனர். இணையாகச் செல்பவர்களும் பிரிந்தேதான் ஆகவேண்டும். இதுவிதி, யாத்திரையின் நுட்பமாக விளங்கியது இது. என்னுடன்வந்த நா.தி. அவர்கள் மட்டும் யமுனையில் இருந்து திரும்பும்போது பிரிக்கப்பட்டார்கள். குதிரைக்காரர்கள் சீக்கிரம் மலையை விட்டுக் கடந்துவிடவேண்டும். இல்லையேல் இருட்டிவிடும், மழைவரும் என்று காரணங்கள்காட்டி குதிரையைவிரட்டி ஓட்டுகின்றனர். அது ஓடும்போது அமர்ந்துள்ள நமக்கு வலி தாங்க முடியவில்லை. நா.தி. அவர்கள் மிகவும் சிரமப்பட்டு குதிரைக்காரர்களுடன் போராடி, வேகமில்லாமல் வரும்படி பணித்து அதன்படி சற்றுக்காலம் தாழ்த்தி வந்தார்கள், அவர்கள் வேகமாக செலுத்துவதன் காரணம் சரிதான் என்றாலும், மலையின் செங்குத்திலும், சரிவுகளிலும் வேகமாக இறங்குவதும், குதிரையை விரட்டுவதும் அச்சமாகவே உள்ளது. திருவருள் எல்லாம் நலமாகவே முடித்து வைத்தது. வழக்கம்போல் ஹனுமான் சட்டி தர்மசாலைக்குச் சென்று தங்கினோம். எந்த தர்மசாலையில் முதல் நாள் வாசலில் படுத்தோமோ அந்த இடத்தில் இப்போது தகுதி வாரியாக தனிஅறை பெற்று இராப்பொழுதைக் கழித்தோம். அவ்வூரில் அறைபெற்று இயற்கையாக எரிகிற விறகில் கோதுமை ரொட்டி சுட்டுக்கொடுத்த விடுதியாளர் அழகும் சுவையும் அளவும் மற்ற ஊர்களில் அவ்வளவாக இல்லை,

இயற்கைக்குழல் அமைத்து சின்னாசட்டி மறக்க முடியாத இடம். யாத்ரீகர்களுக்குத் தங்கும் வசதிகள் உள்ள கடைசியான இடம் இதுவே. இங்கிருந்துதான் யமுனோத்திரி சென்று தீர்த்தமாடித் தங்கி மீள வேண்டும்.

23-10-91 தேதி காலை 9.00 மணிக்கு காலை பூஜை முடிந்தவுடன் கயிலை மாமுனிவரை வணங்கி ஆசி பெற்றோம். அவர்கள் தலைமையில் கங்கோத்திரி நோக்கி எங்கள் வண்டிதாவிச் சென்றுகொண்டிருந்தது. யமுனை நதியின் சிந்தனை வட்டம் எழுந்தது.

சூரியனுக்குச் சுவாகா தேவியிடம் பிறந்த குமாரி யமி எனவும் பெயர் பெற்றார். யமன் தங்கை. இவள் தீர்த்தமாயினாள் இவளுக்கு மற்றொரு பெயர் காளிந்தி.

இவளுக்கு ஆமை வாகனம், ஒரு கரத்தில் கருநெய்தலும் மற்றொரு கரத்தில் பூர்ண கும்பமும் இருக்கும். யமுனை ஆற்றங்கரையில் அமைந்த பட்டினம் தான் மதுரா. கிருஷ்ணன் சம்பந்தமுடையதாக இது விளங்கினாலும், சிவம் பிரகாசிக்கும் துவாரக்நாத்ஜி மந்திர் யமுனை நதிக்கரையிலுள்ள யமுனை ஆற்றில் ஆமைகள் மந்தை மந்தையாக நிறைந்து நிற்கும். அன்பர்கள் அவைகளுக்கு ரொட்டி முதலிய தின்பண்டங்கள் கொடுத்து மகிழ்வதை நேரில் கண்டு இன்புறலாம்.

இது யமுனை பற்றிய சிந்தனையாதலால் யமுனை நதிக் கரையிலுள்ள மற்றொரு நகரான ஆக்ராவைப் பற்றி வாரணாசி வரும்போது சிந்திப்போம். கணவன் மனைவியாக வந்த செம்பனூர் கோயில் திருமதி உடையார் சகுந்தலாதேவி யவர்கள், தொடக்கத்திலேயே பிரிக்கப்பட்டார்கள். குதிரையில் வந்த அம்மையார் யமுனோத்திரி ஆரம்பப் பயணத்தில் என் குதிரையுடனேயே வந்ததுமல்லாமல் என்னைப் பாராயணம் செய்யத்தூண்டியதுடன் தாமும் பாராயணம் செய்து பஜனை நாமாவளி முழக்கம் செய்து செட்டியாரவர்களுடன் சிவ சிந்தனையுடன் சென்றோம். திரும்பும்போது அம்மையார் அவர்களை வேகமாகக் குதிரைக்காரர் செலுத்தி விட்டதால் பாராயண வாய்ப்பில்லை. எங்கள் குழுவினரில் சிலர் குதிரைப் பயணம் தாக்குப் பிடிக்காமல் இடையில் நின்றும் விட்டனர்.


எனினும் குதிரைப் பயணம் சேனத்தில் உட்கார்ந்திருந்த எனக்கும் சதை வலி, எலும்பு வலி தாக்குப் பிடிக்கவில்லை செட்டியாரவர்களுக்கும் குதிரைப் பயணம் அவர்ஜியாகி விட்டதைக் கண்டு கொண்டேன். குதிரைக்காரர்கள் ஒழுக்கம், நாணயம் தவறாதவர்கள், பொருள்களை நம் நாடு போல் திருடும் பழக்கம் இல்லை. என்றாலும் குதிரைப் பயணமும் துன்பந் தருவது தான் என்பதோடு யமுனை நீராடல் நிறைவாகிறது.


இமயக் கங்கையில் - முனைவாயிலில் - கங்கோத்திரி நீராடல்

1. பாரதப் பெரு நாட்டுக்கு இமயம் ஒரு காவல் எல்லைக் கோடு உலகில் இதைவிடப் பெரிய மலைத் தொடர் இல்லை. உயரமான சிகரங்களும் இல்லை, வளங்களும் வனப்புமில்லை. இமயம் மலைகளின் பேரரசன். அது ஒரு தனி ஆட்சி. பனிபடு சிகரங்கள் பல உண்டு; வெயிலுண்டு; குளிர் உண்டு; வெயில் நுழையாக் காடுகள் உண்டு. பூண்டும் முளைக்காத வெற்றுச் சிகரங்களும் உண்டு; ஆறுகளுண்டு. ஏரிகள் உண்டு, உயரத்திற்கு உயரமாக பருமனுக்குப் பருமனாக ஆண்டவனுடைய பேருருவத்தின் சின்னமாக உலகவருக்கு இமயம் காட்சி அளிக்கிறது. இந்த இமயம் எல்லைக் கோடாகவும் பாதுகாவலாகவும் உள்ளதற்குமேல் ஆன்மீக நிலை உபதேசிக்கும் உபதேசியாகவும் உள்ளது.

2. இமயப் பனிவரையை ஞானபூமியாக நம்மவர்கள் கருதினார்கள், உடல் விறைக்கும்பனி நீரில் விடியும்முன் நீராடி வழிபாடு முடித்துத் தியானத்தில் அமர்ந்தால் தியானப் பயன் கிடைக்க இமயச் சூழல் வாய்ப்பாக உள்ளது. இச் சூழலில் இருப்பவர்களின் தொடர்பும் எளிதில் கிடைக்கிறது. இமயத்தில் வாழும் பெரியோர்கள் மற்ற இடங்களுக்கு அதிகம் வரமாட்டார்கள். வர அஞ்சுவர் என்றே சொல்லலாம். தம் தவ ஒழுக்கம் கெட்டுப்போக மற்ற இடங்களில் வாய்ப்புண்டு, அதனால் தான் இமயப் பனிவரையில் நமது கடவுளை எழுந்தருள வைத்தோம். முனிவர்களையும் அங்கேயே இருத்தி வழிபட்டனர். நீர்த்தளங்களையும் தன்னிடத்தே கொண்டு விளங்குகின்ற இமயம் கங்கை நதியைப் பிரதானமாகக் கொண்டுள்ளது. இக் கங்கை நதி உற்பத்தியாகி

காசியில் விசுவநாதரை அடைவதால் புனிதமடைகிறது "வருணை அசி" என்ற நதியோடு கங்கை கூடுவதால் காசி வாரணாசி என்ற பெயர் பெற்றது. இங்கு கங்கை மாற்றமும் புனிதமும் மிக அடைகிறது. கன்னித் தன்மையான புனிதம் கங்கோத்திரியில் தான் உள்ளது. சங்ககால அரசர்களில், சேரமன் நெடுஞ்சேரலாதன் என்ற பெயர். நீண்டபயணம் செய்து கேதாரத் தலத்தையும், கங்கை நீராடியதையும் குறிக்கும் சேரன் செங்குட்டுவனும், கங்கை நீராடியதை சிலப்பதிகாரம் சொல்லும். இந்த இடம்தான் "கங்கோத்திரி" என்றும் கூறுவர். வடக்கே தீர்த்தம்மிகுதி, தெற்கே தலம் மிகுதி இதனை தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி - என்று வாதவூரார் அருளுவார்.





குருக்ஷேத்திர தரிசனம்

1991 செப்டம்பர் 20ம் நாள் காலை 6.30 மணிக்கு டில்லி சந்திப்பு நிலையத்தில் உத்திர சுவாமிமலைப் பிரசாதத்தோடு கயிலை மாமுனிவர் அவர்களைத் தரிசித்து டில்லி அன்பர்கள் வரவேற்று வணக்கம் தெரிவித்துக் கொண்டனர். வரவேற்றுப் போற்றிய அன்பர்களின் மாலைகள் மலையெனக் குவிந்தன. அனைவர்க்கும் திருநீறு வழங்கி ஆசி அருளியவுடன் கருமமே கண்ணாகக்கொண்ட எங்கள் "கயிலை மாமுனிவர்" ஆணைப்படி காசியிலிருந்தே வரவழைத்திருந்த பேருந்துமூலம் திட்டமிட்டபடி எங்கள் மூட்டை முடிச்சுகளை ஏற்றி ஹரித்துவாருக்குப் புறப்பட்டோம்.

டில்லி வருவதற்கு முன்பே கயிலை மாமுனிவர் அவர்களும் சிதம்பரம் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இரயில் வண்டியிலேயே வழக்கப்பட்டி திருமஞ்சனம் செய்து பூஜையும் முடித்து விட்டார்கள். டில்லியில் இறங்கியவுடன் நீராடிப் பூசனைகள் நிகழ்த்தலாமென்று நானும் நா.தி. அவர்களும் காலைக் கடனை ஒத்திவைத்தது எங்களின் தவறு என்றாலும் அத்தவறே நன்மையாக அமைந்துவிட்டது. எங்கள் குழுவிலுள்ள அனைவரும் காலை 9.00 மணி ஆகியும் குளித்துவிட்டுச் சிற்றுண்டி உண்ணமுடியாமல் எங்கள் கவலையைச் சுமந்து பஸ் போய்க்கொண்டே இருந்தது.

கயிலை மாமுனிவர் அவர்கள் எங்கள் கவலையைத் தம் கவலையாக மேற்கொண்டு இனிமேல் விரைந்து காலைப் பூசையை வாய்ப்புள்ள போதே முடித்து விட வேண்டுமென்று ஆணையிட்டுவிட்டு நாங்கள் குளிப்பதற்குரிய இடத்தை விசாரித்து வழியில் "குருக்ஷேத்திரம்" இருப்பதை அறிந்து அங்கே போக உத்திரவிட்டார்கள், எங்கள் பேருந்து முக்கியப் பாதையிலிருந்து குருக்ஷேத்திற்குத் திரும்பியது. இக் குருக்ஷேத்திரம் பாரதநாடு முழுவதும் நன்கு அறியப்பட்ட ஸ்தலமாகும். தமிழ்நாட்டு நாயன்மார்களில் சிறந்த அப்பர் சுந்தரர் பாடலில் குருக்ஷேத்திரம் குறிக்கப்படுகிறது. திருநாவுக்கரசர் தமது திருவீழிமிழலைக் குறுந்தொகையில் – "குருக்கேத்திரத்தார் பலர் தொழும் வீழிமிழலையே" – என்றும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தமது திருக்கேதாரப் பதிகத்தில் – "குருக்கேத்திரம் கோதாவரி குமரி குளியீர்"– என்றும். முறையே பாண்டவர்களைக் "குருக்கேத்திரத்தார்" என்றும் அங்குள்ள "தீர்த்த"மென்றும் குறிக்கப்படுகின்றன. கேதார யாத்திரை நிச்சயமானதிலிருந்து இந்தப் பாடல்களை நித்தியப்படி பாராயணம் செய்வேன் இதனை எப்படித் தரிசிக்கப் போகிறோம்? என்று பலநாள் எண்ணிய எண்ணம் திருவருள் வாய்ப்பாகக் கூட்டிற்று.

சுந்தரர் கேள்விப்பட்டுப்பாடிய "குருக்ஷேத்திரத்தை" எல்லோரும் காணும்படியாக சொக்கலிங்கப் பெருமான் கருத்தறிந்து கயிலை மாமுனிவர் மூலமாக முடித்து வைத்தார் குருக்கேத்திரத் தீர்த்தம் சமுத்திரம் போன்று காட்சியளித்தது ஏற்கனவே நீராடிய கயிலை மாமுனிவர் அவர்களும் எங்களுடன் நீராடி ஜபம் செய்தார்கள். திருக்குளத்தின் நீர்மிகச் சுவையான "தழுங் கரும் தேன் அன்ன தண்ணீர்" என்ற திருவாசக வரியை நினைவூட்டியது. கரைகள் பிரும்மாண்டமான கட்டிடங்களை உடையன, தீர்த்தக் கட்டங்களை வடநாட்டார் மிகப்புனிதமாகப் போற்றுகின்றனர். வாய் கொப்பளிப்பது, சோப்புப் போடுவது அனுமதிப்பதில்லை, குளத்தின் படித்துறைகள் வழுக்கல் இன்றி பாதுகாக்கப்படுகின்றன. இத்தீர்த்தத்தில் கிரகண நாட்களிலும் தசரா நாட்களிலும் லட்சக் கணக்கானோர்நீராடுவர். சிரார்த்த நாளில் நீராடிச் சிரார்த்தம் கொடுப்பது வழக்கமாக உள்ளது இதற்கு "பிரம்மசரோவம்" என்று பெயர் எந்த குருக்ஷேத்திரத்தில் நீராட வேண்டுமென்று எண்ணினேனோ அதில் நீராடி சிவபூஜை செய்து முடித்து, கும்பிட்ட பயன் காண்பார்–போல அங்கு எழுந்தருளியிருந்த கயிலை மாமுனிவரின் கழல் இணைகளுக்கு, எங்கள் நா.தி. அவர்களும் குழுவினர்களும் மலரிட்டு வணங்கி ஆசியும் நீறும் பெற்றோம். இத் தீர்த்தத்தில் நீராடமுடியாதவர்கள் கயிலை மாமுனிவர் உத்திரவுப்படி பெற்றோர், குரு, உற்றார், சுற்றத்தார் இவர்களை நினைந்து சம்ப்ரோக்ஷணம் செய்துகொள்ள வேண்டுமென்று உத்தரவானத்தின்படி நீராடாத சிலர் அப் பணியைச் செய்து முடித்தனர். குருக்ஷேத்திரம் பற்றிய சிந்தனை வட்டம் தொடர்ந்தது.

குரு வீற்றிருக்கின்ற இடம் குருக்ஷேத்திரம் சிவம் விளங்கும் இடம் சிவக்ஷேத்திரம், க்ஷேத்திரம் என்ற சொல்லுக்கு தமிழ் 'தளி' என்று வழங்கப்படுகின்றது. நமது ஆதீன மகா சந்நிதானங்கள் பெரியவர்கள் எழுந்தருளியிருக்கும் இடமும் குருக்ஷேத்திரங்கள் தான். நாம் இன்று ஆதீனம் ஸ்ரீ மடம் என்றும் வழங்கி வருவதை அறிவோமே தவிர, குருக்ஷேத்திரம் என்று அவ்வளவாக அழைக்கப்படுவதில்லை. தமிழ் மக்கள் தம் தலைவரை யார் என்று அறிந்திருந்தால் தத்தம் குருட்டினை தீக்கும் குருக்ஷேத்திரம் வந்து பணிந்து தகுதிப்பாட்டில் உயர்ந்திருப்பார். "தம்மானை அறியாத சாதியார் உளரோ" என்று சுந்தரமூர்த்திகள் எழுப்பிய விஞ இன்றும் அப்படியே உள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் க்ஷேத்திராடனம் செய்யும்போது தமக்குரிய குருநாதரின் திருத்தலம் சென்று வணங்கியே அவர்கள் அனுமதியுடன் சென்று வரவேண்டும், குடும்ப நன்மை தீமைகளிலும் குருக்ஷேத்திரம் வந்து வழிபட்டு வாழ்த்துப் பெறுவது வழக்கம். திருக்கோயிலைவிட "குரு" எழுந்தருளியிருக்கின்ற குருக்ஷேத்திரம் ஐந்து மடங்கு உயர்வானது. அவை-1 திட்பமும் நுட்பமும் உடைய ஞானிகள் இருப்பதினாலும், 2 ஓடிவரும் அன்பர்களுக்கு உண்மை உணர்த்துவதனாலும், 3 உடம்பின் உண்மை உணர்ந்து பசி நீங்குவதனாலும், 4 உயிர்களை கருமத்தொண்டுகளில் ஆற்றுப்படுத்துவதனாலும், 5 அறம் உபதேசிக்கும் அடியார்கள் இருப்பதனாலும், குருக்ஷேத்திரம் இந்த வாய்ப்புகளைப் பெறுகின்றது. "திருக்கோயில் பெறவில்லை" என்று சுவாமி பாடியிருக்கின்றார். அப்பாடல் சாது சுவாமிகள் அருளியது.

"திடம் பெற்ற ஞானி சேர்க்கையினால் பசி தீர்க்கையினால்
உடம்புற்ற உண்மை உணர்த்துவதால் உபதேசிக்கையால்
இடம் பெற்ற மங்கை பங்காளர் அடியார் இருக்கையினால்
மடம் பெற்ற பேறு திருக்கோயிலுக்கு இல்லை மாநிலத்தே"- என்று




குருக்ஷேத்திரத்தின் குண நலன்களைக் கூறுகின்றது. இப் பாடலின் ஓவியமாகக் குமர குருபரரின் வாழ்வும் அவரின் ஆதீனத் தொடர்புச் செய்திகளும் மெய்ப்பிக்கும். திருக்கோயிலை வணங்கக் கற்றுக் கொண்ட மெய்யன்பர்கள் ஆண்டிற்கு ஒருமுறையேனும் குருவணக்கம் செய்ய குருக்ஷேத்திரம் வந்துபோக வேண்டும்., குரு பணி செய்தலின் சிறப்பைச் சிற்றம்பல நாடிகள்

கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவா இன்பத்துள் வைத்த – குருவின்
அடியார் அடியார் அடியார் அடியார்
அடியாரைச் சார்ந்த அவர்

என்ற பாடலால் அருளியுள்ளார்

ஆண்டிற்கு ஒருமுறையாவது நமது குருவின் பூஜைக்குச் செல்ல வேண்டும் என்பது விதி.
அதனால் நலமும் வளமும் உண்டாகும் என்பது சிவநெறிக் கருத்தாகும்.

"தெய்வம் தெளிமின்
தெளிந்தோர்பேனுமின்"
என்ற இளங்கோவடிகள் அறிவுரையும்
உணரத்தக்கது.



திருக்கேதார தரிசனம்

25-9-1991 காலை 6.00 மணிக்கு திருக்கேதாரநாதரை வழிபட எங்கள் பயணம் தொடங்கியது. திருக்கேதாரம் திருமுறைப்பாடல் பெற்ற வடநாட்டுத்தலங்களுள் ஒன்று. இதற்கு அப்பால் இமயமலை பெருஞ் சுவர்கள் போல் எங்கும் போகமுடியாத நிலையில் காட்சியளிக்கிறது. கேதாரத்தை இமயத்தின் உச்சி எனலாம். அரித்துவாரிலிருந்து கேதாரம் 150கல் தொலைவு உள்ளது. கேதாரம் என்பது ஒரு தலம் மட்டுமல்ல, தீர்த்தமுங்கூட; இங்கு உமாதேவியார் சிவ மூர்த்தியைப் போற்றி பக்தர் செய்யும் வழிபாடு தமக்கு வேண்டினாள்; தேவி நீல மலர்கொண்டு பூசித்ததாக ஐதீகம்.

பனியின் அதிதேவதை சிவ பூசை செய்து பாவம் நீங்கிய தலம் இது. கேது என்பவன் தர்மசன் என்னும் மனுவின் புத்திரன். இவன் தவ பலத்தால் கிரகபதம் பெற்றான். அக்கினிக்கு விகேசியிடம் பிறந்தான் என்பது இராகு புராணம். இராகு ஆறு குதிரைகள் பூட்டிய தேரை உடையவன். இவன் பூசித்து வழிபட்ட தலம் இது என்று புராணம் புகழ்கிறது. இந்த வரலாற்றுச் சிந்தனையோடு நாம் கேதாரத்தை விட்டு விடுவதாக இல்லை.

பண்டைத் தமிழர்கள் திருக்கேதாரத்தை வழிபடுவதற்காக இமயப்பனி வரையைக் கடவுள் நிலைபெற்ற இடமாகப் போற்றினர். கங்கையைத் தீர்த்தமாகப் போற்றியது போல, இமயப்பனிமலையில் எழுந்தருளியுள்ள கேதார நாதரை வணங்குவதில் சேர, சோழ, பாண்டியர் மூவரும் போட்டியிட்டு வணங்கிச் சென்றிருக்கின்றனர். இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற தொடரில் “இமய வரம்பு” என்பது சிவபெருமானின் எல்லையற்ற அருளை இமயத்தில் பெற்றவன் என்று பொருள். வெறும் வெற்றிக்காக இமய வரம்பன் என்ற பெயரை அவன் வைத்துக்கொள்ளவில்லை.



"கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை வடதிசை எல்லை இமயமாக" – என்ற பதிற்றுப்பத்து வரிகள்தான் வழிபடும் தெய்வம் ஆதலின் இமயத்து உச்சியில் உறையும் சிவபெருமானை முற்பட வழிபாடு செய்தான் என்பதனால் திருக்கேதாரத்தின் முன்னைப் பழமை சுட்டப்படுகிறது.

சிலப்பதிகார காலத்தில் இக்கேதாரம் இமயச் சிமயத்தின் இருப்பதாகவும், இது இருக்கின்ற பகுதி "குயில் ஆலுவம்" என்றும், இங்கே இருக்கும் பெருமான் "உமையொரு பாகன்" என்றும், அவருடைய திருவடியைப் பரவ செங்குட்டுவன் மனம் கொண்டான் என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது. கங்கைக் கரையில் கனக விசயரை வென்று கண்ணகிக்கு கல் எடுப்பித்துக் கடவுள் மங்கலம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்ட இடங்கள் முறையை இன்று குப்தகாசி என்றும், கேதாரம் என்றும் வழங்கப்படுகிறது.

பண்டைத் தமிழ் வேந்தர்கள் பலரும் கங்கை நோக்கிப் பயணம் செய்வதில், வாரணாசியை இடைக் காலத்தவர் மாற்றிக்கொண்டனர். கங்கைப் பயணம் கடுமையாகவும், கேதாரப் பயணம் கொடுமையாகவும் இருந்ததால், வளத்தோடும், நலத்தோடும் போவதற்கு வாரணாசியோடு நிறுத்திக்கொண்டனர், ஆனால் வீரரும் மற்றவர்களும் ஆன்ம வீரர்களும் வாரணாசியைத் தாண்டி இமயமலையைச் சூழ்ந்து சஞ்சரித்துச் சிவத்தைக்காண தவம் செய்வதையே பொழுது போக்காகக் கொண்டனர்; பிற்காலச் சோழர்களில் கங்கை கொண்ட சோழன் என்ற இராஜேந்திர சோழன் திருக்கேதாரத்தையே கங்கை கொண்ட சோழபுரமாக ஆக்கியுள்ளான். திருக்கேதாரநாதரின் திருக்கோயிலின் உள்ளமைப்பு மண்டபங்கள் இரண்டு உள்ளன. முன் மண்டபத்தில் உள் சிற்பங்களில் திராவிட கலைப்பணியில் அர்த்த மண்டபம், கருவறை மண்டபம் அமைந்திருப்பது சோழர் காலத் திருப்பணியாக உள்ளது. உட்சுவரில் கங்கை கொண்ட சோழன் புடைப்புச் சிற்பம் உள்ளது. அக்கோயிலின் முன்பகுதி குப்தர்கால ஆட்சியில் அமைக்கப்பட்டது என்பர். என்றாலும் அது பிற்கால அமைப்பையே நினைவூட்டுகிறது.

திருக்கேதாரத்தை நினைந்தவுடன் முன்பே கேட்ட செய்திகளைத் திருஞான சம்பந்தப் பெருமான் திருப்பருப்பதத்திலிருந்தபடியே தேவாரப்பதிகத்தைப் பாடினார். திருஞான சம்பந்தர் காலத்தில் திருக்கேதாரம் செல்லுவது என்பது கடினம் என்பதை அவர் பதிகம்மூலமாக அறியலாம். ஞானத்தால் பாடிய தலத்தை ஊனக் கண்ணால் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. ஆறுமாதம் பனிமூடி யாரும் செல்ல முடியாதபடி இருக்கும். இத்தலம் இந்துக்களாய்ப் பிறந்தோர் அனைவரும் மொழி வேறுபாடின்றி எல்லா தேசத்தவர்களும் ஒன்று கூடுகின்ற தேசிய ஒருமைப்பாட்டுத் தலமாக விளங்குகிறது. திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடலைத் தாளமிட்டுப் பாடிக்கொண்டே நாங்கள் எங்கள் காரில் வந்தோம். எங்களுக்குக் கயிலை மாமுனிவர் அவர்களது கார் வழிகாட்டிக்கொண்டே சென்றது. எங்களுடைய பயணம் உத்தரகாசி, குப்தகாசி வழியாகக் கௌரி குண்டம் சென்று நிறைவுற்றது. அதுதான் எங்கள் காரின் பயண முடிவு; இக் கௌரி குண்டம்தான் **தேவாரப்பாடல்பெற்ற "திருவனேகதங்காவதம்"** என்று கயிலை மாமுனிவர் அவர்கள் விளக்கம் செய்தார்கள். அங்குத் தங்கி, அதற்குப் பிறகு அங்கிருந்து மலைச்சரிவுகளில் ஏறியும், இறங்கியும் 16கல் தொலைவு நடந்து செல்ல வேண்டும். அல்லது குதிரையில் செல்ல வேண்டும்; எங்களுடைய பயணம் கயிலை மாமுனிவரின் தலைமையில் நிகழ்வதால் அவர்களை எங்கள் மனம்பற்றிக் கொண்டாலும், அவர்கள் சென்ற காரை எங்கள் கார் சென்று பற்றிக்கொள்வதில் பின்தங்கிவிட்டது. அதலால் எங்களோடு வந்த, ஏனைய மூன்று கார்களில் வந்த அன்பர்களும், கௌரி குண்டத்தை அடைவதற்கு காலை 6.00 மணி ஆகி விட்டது. எங்கள் தலைவர் கயிலை மாமுனிவர் அவர்கள் யாத்திரைக் காலத்தில் சில வேளைகளில் காத்திருந்து அழைத்துச் செல்வார்கள். சில வேளைகளில் எங்களை விட்டுவிட்டு சென்று தன் கருமத்தில் கண்ணாக நின்று தவம் பெருக்குவார்கள்.

கௌரி குண்டத்தில் நாங்கள் தங்குவதற்கு இடந்தேடி தூக்கணாங்குருவிபோல் ஆடியும், ஓடியும், அலைந்தும், ஓய்ந்தும் அறையிலேயே ஒடுங்கி விட்டோம். ஆனால் கயிலை மாமுனிவர் அவர்கள் 5.00 மணிக்கே கௌரி குண்டத்தை விட்டுப் புறப்பட்டு நடந்து சென்று திருக்கேதாரத்தை இரவு 11.00 மணிக்கு அடைந்துவிட்டார்கள். என்ற செய்தி எங்களுக்குக் காலையில்தான் கிடைத்தது. எங்களை அதிகாலையிலேயே புறப்பட்டு வரும்படியாகப் பணித்திருந்தார்கள். காலை 10.00 மணிக்கு வந்தால் அபிஷேகம் நடத்தி வழிபடலாம் என்றும் அறிவுரை வழங்கி இருந்தார்கள். எங்களோடு வந்த பலரும் காலையிலேயே குதிரைச்சவாரிசெய்து கேதாரத்தை அடைந்து வழிபட்டு மீண்டனர். ஆனால் – அடியேனும் மதுரை நா.தியாகராஜச்செட்டியாரும் சிதம்பரம், வேதரத்தினம் ஆகிய மூவரும் நடந்து செல்வதாகவே தீர்மானம் செய்து, கையில் கம்புடன் மயான காண்டத்து அரிச்சந்திரனைப்போல் காட்சி கொடுத்துப் பயணத்தைத் தொடங்கினோம். நடந்து செல்வது முதலில் இன்பமாக இருந்தாலும், தொடர்ந்து நடந்து கொண்டேயிருப்பது சலிப்பு ஏற்படுத்தியது. நா.தியாராஜன் செட்டியார் நடை என்பதையே அறியாதவர். காரில் வலம் வரும் கோடீஸ்வரர் வீட்டுச் செல்லப்பிள்ளை. இங்கே அவரும் எங்களோடும் ஒருவராக எங்களையும் இயக்கிக்கொண்டு நடப்பதில் ஊக்கம் காட்டினார். செட்டியாருடைய மனஉறுதியைக் கண்டு மதில்மேல் பூனையாக இருந்த என் மன உறுதி நிலையானது ஆகி பலமணிநேரம்நடந்து கோயில்நடை சாத்துகின்ற 1.00 மணி அளவில் திருக்கேதாரநாதரைச்சென்று தரிசித்தோம். நாங்கள் கோவிலுக்குள் நுழையும்போது கோயில்கதவைச் சாத்திக் கொண்டிருந்தனர். எங்கள் மூவரின் பக்தியையும், வேகத்தையும் பார்த்த கோயில் காவலர்கள் கதவடைப்பதை நிறுத்தி எங்களை வரவேற்று வழிபாடு செய்து வைத்தனர்.



திரு. செட்டியார் அவர்களும், நானும் கையில் கொண்டு சென்றிருந்த திருக்கேதாரப் பதிகம் இரண்டையும் இறைவன் முன்புவாயாரப்பாடி வணங்கினோம். ஒன்று, திருஞான சம்பந்தர் பாடியது. மற்றொன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியது. நாங்கள் பாராயணம் செய்கின்ற வேளையில் சிதம்பரம் வேதரத்தினம் தன் வழக்கமான அபிஷேகத்தை செய்தார். அர்ச்சனை செய்து பிரசாதத்தோடு எங்கள் எதிரில் வந்து பதிகம் ஓதுவதிலும் பணிசெய்து, கேதாரநாதரை மும்முறை கர்ப்பக்கிரகத்தின் உள்ளே வலமாக வந்து வழிபட்டோம். அப்போதுதான் அந்த லிங்கம் இயற்கையான மலை உச்சியின் முகடு என்பதை அறிந்து கொண்டோம். இக் கர்ப்பக கிரகத்தினை உடைய உள்பகுதி முழுவதும் தமிழ்நாட்டுக் கோயில் அமைப்பு போலவே உள்ளது. ஒரே வித்தியாசம் தமிழ்நாட்டில் உள்ளே சென்று வழிபடலாம். திருக்கேதார தலத்தை வலமாக வந்து வழிபட்டபோது திருக்கேதாரப் பதிகங்கள் இரண்டும், தமிழ், ஆங்கிலம். இந்தி என்ற மூன்று மொழிகளிலும் கல் வெட்டுப் பதிக்கப்பட்டிருந்தது. அதைப் பதியவைத்த பெரியவர், காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள். நமது கயிலை மாமுனிவர் திறந்து வைத்த கல்வெட்டு அது. இக் கல்வெட்டால் அறிந்து கொண்டோம். அன்று வியாழக்கிழமை குரு தரிசனம் செய்யவில்லையே என்று வருந்திக் கொண்டிருந்த எங்களுக்குக் குருவின் திருநாமம் கண்ணில் பட்டது. குருவருள் வழங்கும் கேதார நாதர் திருவடியைப் போற்றிப் பலமுறையும் வணங்கினோம். அன்று மணி இரண்டுக்குக் கதவு அடைக்கப்பட்டது. நம் தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள காவலர்கள் மணியைப் பார்ப்பார்களே தவிர மனிதாபிமானத்தோடு அணுகுவதில்லை. அன்று அவர்கள் கேதாரத்தில் விதிப்படி நடந்தால் நாங்கள் மாலை 5 மணிக்குத்தான் இறைவனைத் தரிசிக்க முடியும். அதற்குப்பின் நாங்கள் எப்படி எங்கள் தங்குமிடம் செல்வது? இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க இந்த யாத்திரை பயன்பட்டது எனலாம்.

நாங்கள் கேதாரத்தை அடையும் போதே கயிலை மாமுனிவரைத் தரிசனம் செய்தோம். அவர்கள் சொன்னபடி எங்கும் தங்காமல் கௌரி குண்டத்தை நோக்கி நடந்தோம் – நடந்தோம் – நடந்துகொண்டே இருந்தோம். ஒரே குளிர் மயம் வாயைத் திறந்தால் குளிர் உள்ளே புகுந்து ஆவியாக வெளிவரும். தண்ணீரைத் தொட்டால் தேள் கொட்டுவதுபோல் இருக்கும். அப்படிப்பட்ட குளிர். காசிவாசி முன்னைப் பெரியவர்கள் அருள்நந்தி சுவாமிகளின் அன்புக்குப் பாத்திரமான கேதாரத்துப் பண்டாக்களிடம் பெற வேண்டிய திருவருட் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டோம். கேதார நினைவுக்குரிய படங்களும் வாங்கிக் கொண்டோம். திரு. செட்டியார் அவர்கள் கேதாரத்தைத் தாய்க்கன்று போல் சுற்றிச் சுற்றி வந்து பக்திப் பரவசமானார். கையில் கொண்டு வந்திருந்த புகைப்படக் கருவியால் கேதாரம் முழுவதையும், எங்களையும் சேர்த்துப் படம் எடுத்தார். காசி ஏஜெண்ட் பாலு அவர்கள் மூலமாக நாங்கள் செட்டியாரைப் படமாக எடுத்து எங்கள் நினைவுச் சிந்தனைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டோம்.

மீண்டும் நடந்து வந்தது ஒரு பெரிய திருவருட் செயல். இடையிலேயே குதிரையில் ஏறிச் செல்லலாம் என்பது என் வாதம். வேதரத்னம் நல்ல உடற்கட்டு உடையவர். அவரே அசந்து விட்டார். செட்டியாரும் அசந்துவிட்டார். எனினும் என் வாதம் எடுபடவில்லை. காரணம் குதிரை கிடைக்காததுதான். நாங்கள் மலைச்சரிவுகளில் தன்னந்தனியாக அருவிகள் ஒழுகிக் கொண்டிருக்கும் இடத்திலெல்லாம் ஊர்ந்தும். நடந்தும் அசைந்தும், அமர்ந்தும் இயங்கிக்கொண்டு வந்தோம். இரவு மணி 12 ஆகிவிட்டது. திரு. செட்டியார் அவர்களின் கால் வீங்கிவிட்டது. கைகள் இயங்கவில்லை என்றாலும் எங்களைச் கண்காணிக்கும்படி காசி ஏஜென்ட் பாலு உடனுகை வந்து எங்களை உட்காரவிடாமல் இயக்கிக்கொண்டு வந்து கௌரி குண்டத்தில் இரவு 2.00 மணிக்கு விட்டார்கள். எங்கள் வருகையை எதிர்பார்த்த கயிலை மாமுனிவர் அவர்கள் உறங்காமல் விழித்து. வாழ்த்தி ஆசி வழங்கி அதற்குப்பின் உறங்கச் சென்றார்கள்.

திரு. நா.தியாகராஜன் அவர்களோடு நடந்து வருகின்றபோது அவர்கள் கையில் வைத்திருந்த "டார்ச் லைட்" இருட்டு நேரத்தில் மலைப்பாதையில் நடந்து வருவதற்குச் சிலமணிநேரம் மட்டுமே உதவியது. இறைனின் திருவருள் ஒளிதான் நிலையானது என்பதனை அன்று சந்திரன் உதயம் செய்து ஒளிவழங்கி மலைப்பாதைக்கு வழி காட்டியதால் அறிந்து வணங்கினோம். மலைப்பாதையில் தன்னந்தனியாக வந்த எங்களை எந்த விலங்குகளும் நச்சு அரவுகளும். கண்ணிற்படாமலும், எங்களை நெருங்காமலும் திருவருள் காத்தது. சிவபெருமான் திருவருள் சந்திர ஒளியாக எங்களுக்குக் கிடைக்காவிடில் குன்றுகளில் முட்டி மோதி துன்பக்கடலில் வீழ்ந்திருப்போம். துன்பக்கடலில் இருந்து ஏற வாங்கி என்ற திருமுறைத் தொடர்க்கு அன்றுதான் பொருள் தெரிந்தது.

"கௌரி குண்டம்" சுடுநீர்ச் சுனையில் நீராடி அங்குள்ள கௌரி மந்திரில் பூசனை முடித்தேன். கயிலை மாமுனிவரின் கூற்றுப்படி அநேகதங்காவதம் கோயில் தரிசனம்செய்து பதிகம்ஓதி வழிபட்டோம். தமிழ்நாட்டுக் கலைப்பாணியில் இங்கு பாவைச் சிற்பம், கோயில் அமைப்பு உள்ளது.

இந்தத் தலத்தில், தங்கும் வாய்ப்பு! நினைவிற்கும் எங்கள் குழுவினர் ஒன்றாகக் கூடும் வாய்ப்புக்கும் நட்புக்கும் வித்திட்டது எல்லோரும் ஒன்றான இடம் இத்தலம் தான் இடநெருக்கடியால் ஒருவரோடு ஒருவர் நெருங்கிய பழக்கம்கொள்ள வாய்ப்பு ஆயிற்று. இத்தலத்தில் முதல்நாள் இரவும் தங்கினோம். மறுநாள் இரவும் தங்கினோம். யாத்திரை கடவுள் நோக்கியதாக இருந்ததால் இடநெருக்கடியை திரு. செட்டியார் அவர்கள் ஒரு பொருட்டாக எண்ணாமல் அன்பர்கள் பலருக்கும் தமது தலையணைகளை வழங்கி உறங்கச் செய்தார்கள். மருந்து, மாத்திரை வாங்கி வருவதிலும், தொண்டு செய்வதிலும் முன்னோடியாக செட்டியாரவர்களும், திரு. வேதரத்தினம் அவர்களும் தலைவர்களாக விளங்கினார்கள்.

கயிலை மாமுனிவர்களின் திருவுள்ளம் மகிழுமாறு எங்கள் கேதாரப்பயணம் இனிது நிறைவேறியது.

பத்ரிநாத் தரிசனம்

"இடம்" என்பது தனிச்சிறப்புடையது. எதனை – எந்த இடத்தில் பெறவேண்டுமோ அதனை அந்த இடத்தில் அடைவதே சிறப்பு. யானையைக் கோழி வென்ற இடம் உறையூர் என்றும், முயல், வேட்டை நாயைத் துரத்திய இடமே பாஞ்சாலங்குறிச்சி என்றும் அரசியல் வரலாறு கூறுகிறது. மெலியவர், வலியவரை வென்ற இடம் அரசின் தலைநகராக்கப்பட்டது போலவே அகவுணர்வு – ஆன்மீக உணர்வு வெற்றிகண்ட இடமே தலங்களாகக் காட்சி அளிக்கின்றன. வடக்கிருத்தல் நோக்கமே புனிதம் கருதித்தான்.

திருக்கேதாரப் பயணத்தோடு எங்கள் தலப்பயணம் நிறைவு அடையவில்லை. பத்ரிநாத், காசி, நேபாளம் முதலிய தலப் பயணத்தோடு தான் எங்கள் யாத்திரை நிறைவடைகிறது. 27.9.1991 வெள்ளிக்கிழமை கௌரி குண்டம் வெந்நீர் ஊற்றில் நீராடி திருவனேகதங்காவதம் சிறுகோயில் பூசனை முடித்துச் சுந்தரர் பதிகத்தை ஓதிவழிபட்டோம். அம்பிகை போல வழிபடப்படும் இக்கோயிலில் இலிங்கமோ, வேறு விக்கிரகங்களோ இல்லை. தமிழ்நாட்டு சிவன் கோயிலில்களைத் தரிசித்துவிட்டு, இதனைத் தரிசிப்பது பொம்மை விளையாட்டுப் போல இருந்ததே தவிர பக்தி உணர்ச்சிக்கும், திருமுறைப்பாடல் பொருள் உணர்ச்சிக்கும் சம்பந்தமே இல்லை. ஒருவழியாக காலை 9.00 மணியளவில் கௌரி குண்டத்தைவிட்டு எங்கள் கார் கயிலை மாமுனிவர் காரைப்பின் தொடர்ந்து அணிவகுத்துச் செல்லலாயிற்று. எங்கள் கார் இமயமலைக் குன்றுகளை வளைந்து வளைந்து தாவித் தாவி வெகுவேகமாக வந்து கொண்டிருந்தது.



வழியில் ஆப்பிள் மரத்தைப் பார்த்து சிறிய பெருந்தகையார் நா.தியாகராசன்செட்டியார் காரை நிறுத்தி எங்களைக் காணச்செய்தார். அங்கு நம்நாட்டில் கொய்யாப்பழம் விற்பதுபோல் விற்றுக்கொண்டுள்ள ஆப்பிள்களை ஒரு டஜன் வாங்கி அனைவரும் உண்ணும்படி செய்தார். ஐஸ்கிரீம் ஆப்பிள் மிகச் சுவையாக இருந்தது. விலையும் மிக மலிவாக இருந்தது. நண்பர் வேதரத்தினம் ஆப்பிளை நறுக்குவதற்குக் கத்தியைக் கொடுத்து நறுக்கி உண்ண உதவினார். உடனாக வந்த பெரியவர் காங்கேயம் பிள்ளையவர்கட்கு வெற்றிலைதான் முக்கியம். ஆதலில். அவ்வப்போது வெற்றிலைக்கடை நாடி வண்டி நிற்பதாயிற்று. மலையின் அருவிப் பெருக்கு மிகுந்துள்ள ஓரிடத்தில் கயிலைமாமுனிவர் அவர்களின் ஆணைப்படி தயார் செய்யப்பட்டிருந்த திரு. குமாரசாமி பிள்ளையின் கைவண்ணச்சுவை உணவு சாம்பார் சாதமாக வழங்கப்பட்டது. இவ்வுணவு கௌரி குண்டத்தில் தயார் செய்யப்பட்டது. நா.தி.செட்டியாரவர்கள் மிகவும் சுவைத்து உண்டார்கள். மறுமுறையும் சுவை உணவு பெற்று வாங்கி உண்ட இடம் இது ஒன்று. ஒரே சாம்பார் சாதம் என்றாலும் அந்த உணவின் சுவை இமயமலைத் தண்ணீரோடு கலந்து வந்தாற் போலும் அமுதமாக விளங்கிற்று. ஒவ்வொருவரும் தனித் தனியாகக் கொண்டு வந்திருந்த ஊறுகாய் – வறுவல் இன்னபிற பண்டங்கள் கொண்டும், கொடுத்தும் பரிமாற்றப்பட்டு அன்புருவாக விளங்கினார்கள்.

கயிலை மாமுனிவர் அவர்களை வணங்கி
களித்துக்கலந்ததோர் காதற்கசிவொடு
காவிரியாய் குளித்துத்
தொழுது முன்னின்ற இப்பத்தரைக்
கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமுதூட்டி
அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருந் செல்வமாக்கும்
ஐயாறன் அடித் தலமே

என்ற 'ஐயாறன் அடித் தலமே' - என்ற பாடலைப்பாடி வணங்கினோம். காவிரியைக் கங்கை என்று திருத்திக்கொள்ளலாமே. என்று திருவுளம்பற்றி - எங்களை நோக்கி "உண்ணும் உணவு திருவடி" உணர்வுக்கு உதவ வேண்டும் என்ற குறிப்பு இப்பாட்டில் உள்ளது என்று அருளினார்கள் இதுவே உபதேசம் என்பது.

இலக்கிய சர்ச்சையில் காங்கேயம்பிள்ளை அவர்கள் தொடங்கும் போதெல்லாம் நா.தி. அவர்களும் மற்றவர்களும் சுவர்மையாகக் கவனிப்போம். எதனையும் - எளிமையாகவும் நகைச்சுவைப் படவும் கருத்துக்களைச் சித்தரிப்பதில் வல்லவர் என்பதனைச் செட்டியார் அறிந்து கொண்டார். நான் "பாட்டு" சொல்ல வேண்டியது பிள்ளையவர்கள் "விளக்கம்" செய்ய வேண்டியது. இப்படியாக எங்கள் கார்ப்பயணம் நடந்தது நடந்துகொண்டேயிருந்தது. ஒருவழியாக ஜோஷிமடம் வந்து சேர்ந்தோம். பத்ரி போகும்வழி முழுவதும் இராணுவக் கட்டுப்பாடு மிகுதியும் உடையதாக விளங்கியது. திருக்கேதாரம்போல வளமான பகுதியாக இப்பகுதி இல்லை. வறண்ட பகுதியாகவே இருந்தது. முன்னொருகாலத்தில் இலந்தை மரக்காடுகளாக இருந்திருக்க வேண்டும். பத்ரிநாதம் பற்றிய தொகுப்பு இவை:-

"பத்ரிநாதம்" என்பது கந்தபுராணத்தில் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது. இது ஆறுமுக நாவலர் உரைநடை.

மகாவிஷ்ணு தம்முடைய கலைகளுள் ஒருதலைகொண்டு, பூமியின் கண்ணே கங்கைக் கரையிலே பராசார முனிவருக்குச் சத்தியவதி என்னும் பெயரையுடைய யோசன கந்தியிடத்தே திருவவதாரஞ் செய்தருளினார்கள். அவர் வதரிகாவனத்தில் இருந்துகொண்டு வாதராயணரென்னும் பெயரைப்பெற்று சிவபெருமானுடைய திருவருளினாலே வேதங்கள் எல்லாவற்றையும் ஓதாதுணர்ந்தார்; தாமுணர்ந்த வேதங்கள் நான்காக வகுத்து உலகத்தார் உய்யும் வண்ணம் நிறுவியருளினார். அதனால் அவருக்கு வியாசர் என்னும் திருப்பெயர் உண்டாயிற்று வத்ரிகாவணம் என்பதுதான் (இலந்தைக்காடு) "பத்ரி" ஆகி காவணம் போய் "நாதம்" நாராயணனுக்காகி வழங்குகிறது.

ஹரித்துவாரில் இருந்து பதரிநாதம் 187மைலில் உள்ளது வடக்கில் இருடிகள் தவஞ்செய்த இடம். இதில் நரநாராயணன் தவஞ் செய்தனர்; பின்னும் வியாசர் முதலியவர் இவ் வனத்தில் இருந்தனர். இது இலந்தை வனம் - என்றும்

The Temple of Nara Narayana is built on the bank of the Bisher - Ganga (Alakananda) it was the hermitage of the celebrated Kishi vyasa - என்றும், வழங்கப்படுகிறது.

பத்ரிகாச்ரம் - இங்கு நரனுடன் நாராயணனிருக்கிறான். இவ்விடம் கொடுக்கப்படும் தானமும் தவமும் செபிக்கப்பட்ட மந்திரமும் விசேட பலனைத் தருகிறது; மகாதேவர்க்குப் பிரியமான கங்கையும் உள்ளது. இங்கு பிதுர்கர்மம் செய்பவன் பிதுர்களை துன்பத்திலிருந்து கரையேற்றுகிறான். இங்கு சுடுகையுடன் சுவடிய தீர்த்தம் விஷ்ணு தீர்த்தம். இதில் சந்திர சூரியர்கள் கோயில்கள் உள்ளன என்றும், அபிதான சிந்தாமணிக் குறிப்புகளாகும். செட்டியாரும் நானும் தோசையைப் பார்த்துப் பலநாட்கள் ஆனதால் சுவையுடன் உண்டோம். காங்கேயம் பிள்ளையவர்கள் கொண்டுவந்தது. மனிதநேயம் - நட்பின் உயர்வு - உயர் பண்பு - அன்றுதான் வெளிப்பட்டது. அவர் ஒரு சங்கத்தின் தலைவராகியிருந்தவர் என்றுதான் கேள்விப்பட்டிருந்தோம்; ஆனால் இப்படிச் சந்தர்ப்பம் அறிந்து தோசைத்தொண்டு செய்பவர் யாவர் உள்ளனர்? "வாயாரஉண்டபேர் வாழ்த்துவதும்" - என்ற தாயுமானவர் பாடலை மேற்கொள் காட்டி அவரை வாழ்த்திச் சிரமத்திற்குப் பொறுத்து அருளுமாறு கேட்டுக்கொண்டேன். இது போன்ற சந்தர்ப்பங்களில் உதவுவதுதான் நட்பிற்கு வீற்றிருக்கை என்று சிரிப்பை உதிர்த்துப் பெரிதுபடுத்த வேண்டாம் - என்றார்கள் திரு. செட்டியார் அவர்கள் பெரியவர் காங்கேயம்பிள்ளை சொல்லாமல் செய்த இவ்வுதவியைப் பெரிதும் மதித்துப் போற்றினார். எங்கள் குழுவில் வந்தவர் பலர் இரவே நரநாராயணனைத் தரிசித்தனர். நாங்கள் விடிந்து பார்த்துக்கொள்ளலாம் என்று உறங்கிவிட்டோம்.

திரு. நா.தி.செட்டியாரவர்கள் தாம் கொண்டு வந்திருந்த உல்லன் சட்டை ஒன்றை எனக்குத் தந்து குளிருக்கு அணியச் செய்தார். விடுதியில் மெத்தைபோல் உள்ளதை எப்படி போர்த்திக்கொள்ள வேண்டும் என்றும் போர்த்திவிட்டு உபசரித்த செயல் மறக்க முடியாதவை. காரணம்? என்னை மீண்டும் மதுரையில் ஒப்புவிக்க வேண்டுமே என்பதுதான்.

எங்கள் அதிர்ஷ்டம் - மறுநாள் புரட்டாசிசனிக்கிழமை 28.9.91 அன்று காலை வெந்நீர் ஊற்று விஷ்ணு தீர்த்தத்தில்முழ்கி நரநாராயணனைத் தரிசித்தோம். படித்துச் சென்ற காரணத்தால் இவற்றையெல்லாம் உணர்ந்து தரிசிக்கும் வாய்ப்பு எனக்கும் நா.தி.அவர்கட்கும் கிடைத்தது. சந்திர சூரியர் கோயிலையும், வியாசருடைய விக்கிரகத்தையும் வழிபடும்வாய்ப்புக்கிட்டியது. இதனை வைணவர்கள் வடநாட்டுத்திருப்பதிகளில் மூன்றாவதக்கருதி வழிபடுகின்றனர்.

எங்களுக்குக் கயிலைமாமுனிவர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வு விடுதியில் அன்று மாலை 7.00 மணிக்கு வந்துசேர்ந்தோம். ஒரே குளிர்; வந்தவுடனேயே பலரும் களைப்புகூடப்பாராமல் விரைந்து உணவுவிடுதிக்குச் சென்றுவிட்டனர். ஏனென்றால் 8.00 மணிக்குள் கோயில் சாத்தப்பட்டுவிடும். சிற்றுண்டிபிறகு கிடைக்காது. ஓய்வறைக்கு வந்தவுடன் நான் அனுஸ்டானம் முடித்துக்கொண்டேன். செட்டியார் உணவு வேண்டாம் என்று பிரயாணக் களைப்பால் படுத்துவிட்டார். காங்கேயம்பிள்ளை அவர்கள் என்னை அழைத்தார். எனக்கும் களைப்பாக இருந்ததால் உணவு வேண்டாம் என்று போகச்சொல்லிப் படுத்துவிட்டேன்.

என்னவியப்பு! எங்கள் இருவருக்கும் நண்பர் வேதரத்தினமும் காங்கேயம்பிள்ளையும் நியூஸ்பேப்பரில் (இங்கு மலையில் இலை கிடைக்காது) வாங்கிவந்த தோசை பார்சலையும், பாலிதீன்பையில் வாங்கிவந்த சாம்பாரையும் பார்த்து ஆச்சரியப்பட்டோம். உணவு வேண்டாம் என்று படுத்த இக்கோயிலிலும் தமிழ்நாட்டுக் கலைப்பாணியில் அமைந்த திருக்கோவிலாகும். தமிழ்நாட்டுப் பெருமாள் கோயிலில் இருப்பதாகவே எங்கள் உணர்வு கூறியது. திருத்துழாய்ப் பிரசாதம் பெற்று வழிபட்டு மீண்டோம்.

அன்று தங்கிய இடத்தில் காலை 5.00 மணிக்கு நரநாராயண கோயிலுக்குமேலே இமயமலையின் இடைவெளியில் மலப்பாங்கானஇடத்தில் ஒளிமயமான காட்சியை – "நீலகண்டபர்வதம்" என்று பெரியவர் காங்கேயன்பிள்ளைகாட்ட செட்டியாருடன் வழிபட்டோம். மரகதப்பச்சை இலிங்க வடிவாகக் காட்சி கிடைத்தது.

இதுதான் "இந்திர நீலபருப்பதம்" என்ற வடநாட்டுத் திருமுறைத்தலம் என்று குறிப்பிட்டேன். இதனைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். அதில் ஒரு தேவாரம் பாடினேன்.

"என்பொன் என்மணி யென்ன ஏத்துவார்
நம்பன் நான்மறை பாடும் நாவினான்
இன்பன் இந்திர நீலப் பர்ப்பதத்து
அன்பன் பாதமே யடைந்து வாழ்மினே".


இங்கே நரநாராயணன் தவஞ்செய்வது பொருத்தமே என்று நண்பர் வேதத்தினம் ஓங்கிக் குரல் கொடுத்தார். அதுதான் உண்மையுங்கூட யாருக்கு உண்மை தெரிகிறது?

எங்கள் திருமுறை உணர்வு மீதூர மீண்டும் இந்திர நீல பருப்பதம் – நீலகண்டபர்வதம் காட்சியைக் கண்டுவழிபட்டோம். அக்காட்சியை "பத்ரிக்"கு வருவோர் அனைவரும் உணர்ந்து வழிபடுவதைப் பின்புதான் அறிந்து கொண்டோம் அவ்வுணர்வில் சிவம் பிரகாசித்தால் அவர்செய்த ஆசுவழாம்.

பத்ரிநாத்தில் தென்னிந்திய உணவு வகைகள் அனைத்தும் கிடைக்கின்றன. என்ன துன்பம் என்றால் ஆர்டர் கொடுத்துவிட்டுக் காத்திருக்க வேண்டும். காலை 12.00 மணிஅளவில் எங்கள் யாத்திரை மீண்டும். ஹரத்துவாரை நோக்கி மீளலாயிற்றுப் ஸ்ரீநகர் வழியாக மாலை 7.00 மணியளவில் ஹரத்துவார்வந்து முன்புதங்கிய கர்நாடக தர்மசாலையில்வந்து தங்கிக்கொண்டோம். ஆம்! அன்று இரவு கழிந்தது. இனி எங்கள் யாத்திரை வாரணாசி வந்து தங்கி வழிபட்டு நேபாளம் தரிசனம் செய்ய வேண்டும் ஒரே பேருந்து எங்களுக்காகக் கயிலை மாமுனிவரவர்களால்

ஏற்பாடு செய்யப்பட்டுக் காத்திருந்தது. அந்த வண்டியில் புறப்பட்டு வாரணாசிக்கு வந்த யாத்திரை அனுபவம் வழியில் மதுரா, ஆக்ரா முதலிய நகர்களைக் கண்டுவந்த செய்திகள் தனிச் சிந்தனையாக அடுத்த கட்டுரையில் அமையும்.

சங்கரர், இராமநுசர் முதலியோர் வடநாட்டுப் பயணம் செய்திருந்தாலும், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்போல, காசியிலேயே தங்கி சமயப் பணிசெய்து நிறைவடைய வாய்ப்பில்லை. அப்பணியில் செந்தமிழ்க்குருபரர் காசிக்கலம்பகம்பாடி, மன்னர் தொடர்புகொண்டு, விசுவாதநாதர் கோயில், கோதாரநாதர் கோயில் திருப்பணி செய்து குருவருள்போற்றிய செய்திகளை கயிலை மாமுனிவரவர்கள் எங்கட்கு விளக்கம் செய்து வணக்கம்பெற வைத்தார்கள். ஸ்ரீகாசிமடம் திருப்பனந்தாளில் இருப்பதால் மடத்து அதிபர்கள் மூலமாக அவர்கள் ஆசிபெற்று, மன்னர்கள் வாரணாசி சென்று வழிபடவும் நீராடவும் மையமாக விளங்கி அருள் பெருக்கிய வரலாறு பதிவாகி உள்ளது.



மதுரா - ஆக்ரா - காசி

அரித்துவாரில் இருந்து எங்கள் பயணம் சொகுசுப் பேருந்துமூலம் மதுரா, ஆக்ராநகர் வழியாக வாரணாசிக்குக் கயிலை மாமுனிவர் தலைமையில் நிகழலாயிற்று. காலை 7.00 மணிஅளவில் கர்னடகா தர்மசாலையை விட்டுப் புறப்படுவதற்குமுன்பு கங்கைக்கரையில் அமைந்த மகாலட்சுமி திருக்கோயிலை வழிபடவைத்தார்கள். கோளறு பதிகமும்ஓதி வழிபட்டோம். கயிலை மாமுனிவர் அவர்கள் பேருந்து சென்று கொண்டிருந்தபோதே இனிய இசையுடன் திருத்தொண்டத் தொகை, சகலகலாவல்லிமலை ஓதி மகிழ்வித்தார்கள். பொருள் நலமும் சிந்திக்க வைத்தார்கள்.

பேருந்து சொகுசுப்பேருந்துதானே தவிர – அதுமாதம் போகும் காதவழி – என்ற பழமொழியை நினைவூட்டுவதாய் அமைந்துவிட்டது. அது காசியில்இருந்தே கொண்டுவந்த சிறப்புடையது என்றாலும், அப்பேருந்து மதுரா வந்து சேர்வதற்குள் வழியில் இரண்டு இடத்தில், காற்றடைத்த சக்கரங்களைக் கழட்டிப்பழுது நீக்கி வரவேண்டிய தாயிற்று. இச்சமயங்களில் எங்கள் பயணக் குழுவைச் சேர்ந்த திரு. இலிங்கமராஜா – தமது பெரியகுரலால் பழையகாலத்துப் பாடல்களையும் பக்திப்பாடல்களையும்பாடிச் சலிப்பைப் போக்கினார். அவர் திருவண்ணாமலைக் கோயிலின் நிர்வாக அதிகாரியாயிருந்தவர். சொகுசுப்பேருந்து மூன்றாவது தடவையாக மதுராவுக்கு அருகில் வந்து முற்றும் பஞ்சர் ஆகிப் படுத்துவிட்டது. கயிலை மாமுனிவர் அவர்கள் எங்களைத் திக்குத்தெரியாதகாட்டில் அமரவைத்துவிட்டு தமது குழுவினருக்கு மாற்றுப்பேருந்து ஏற்பாடுசெய்து மதுராவில் தங்க ஏற்பாடு செய்தார்கள். நாங்கள் மாற்றுப்பேருந்து வரும் வரையிலும் காத்திருந்தாலும் குழுவில்வந்த பலர் மதுராவுக்கு சர்வீஸ் பஸ்ஸில் ஏறிச்சென்று தங்கிக்கொண்டனர்; எங்கள் மூவர்குழு மட்டும் சாலைவழியில் சமையல் செய்யச்செய்து விளக்கும் கிடைக்காமல் – ரவா உப்புமாவும் செய்யச்செய்து. பொழுதைக் கழித்தோம். காருடன் வந்த கயிலை மாமுனிவர் அவர்கட்கும்

உபசாரம் செய்து, தங்கியிருந்த அன்பர் குழுவினர்க்கும் குமாரசாமிபிள்ளையின் சுவைஉணவு வழங்கப்பட்டது. இவ்வுணவுத் தயாரிப்பில் சிதம்பரம் வேதரத்னம், குடந்தை காங்கேயம்பிள்ளை, சிறிய பெருந்தகையார் முதலியவர்கள் செயல்பட்டவிதம் அனைவராலும் பாராட்டப்பட்டது. அன்று இரவு தங்கி காலை புறப்பட்டோம்.

மதுரா - இது வடமதுரை என வழங்கப்படும். கண்ணன் வெற்றியைத்தெரிவித்த நகர், கண்ணன் லீலைகள் நடத்திய நகரம், யமுனை நதிக் கரையில் உள்ளது. கண்ணன் பிறப்பிடம் சத்ருக்கனரால் உண்டாக்கப்பட்டது. வைணவர்களின் வடநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று; கோபிகாரமணன் பெருமாள் திருநாமம்; சத்தியபாமை, ருக்மணிப் பிராட்டியார் பிராட்டியார் திருநாமம்; விமானம் - பத்ரவிமானம்; தீர்த்தம் - இந்திர தீர்த்தம். கோவர்த்தன தீர்த்தம், யமுனை முதலியன, யமுனை நதிக்கு யாமை வாகனம். ஒரு கரத்தில் கருநெய்தலும். மற்றகரத்தில் பூரண கும்பம் இருக்கும். இக் காட்சிகளை மதுரா மந்திரில் கண்டு வழிபட்டு, பின்பு எங்கள் பயணம் ஆக்ரா நகர் நோக்கித் தொடர்ந்தது.

மாற்றுப் பேருந்தில் வாரணாசிக்குப் பயணம் தொடங்கினாலும் யமுனை நதிக் கரையிலுள்ள மற்றொரு பிரபலமான ஆக்ரா நகரைக் காணவேண்டும் என்று பலர் விருப்பம்தெரிவித்த கருத்தறிந்து முடிக்கும் கயிலை மாமுனிவர் அவர்கள் பத்து நிமிடம் தாஜ்மஹாலைக் கண்டுவர அனுமதி வழங்கினார்கள். எனக்குத் தாஜ்மஹாலைக் காணவேண்டும் என்ற விருப்பம் மீதூர - அக் கட்டிடத்தைக் கண்டுவந்தேன். அதற்கு அணிமையில் யமுனை நதிக்கரையில் குருவின் உயர்வைப்போற்றும்படியாக சோமராஜ்மகராஜ் பிரமாண்டமான கட்டிடம் சலவைக்கல்லில் திருப்பணி நடந்துகொண்டிருப்பதைக் கண்டு வியந்தோம். குருபக்தியை வாழ்த்தினோம். குருவைப்போற்றுவதிலும் சிவ ருத்ராட்சம் அணிவதிலும் சாதாரண வடநாட்டுமக்கள் வல்லவராய் உள்ளதைக் கண்டு மகிழ்ந்தோம்.

"Radha Sami Faith" என்ற ஆங்கிலப் புத்தகம் அங்கு நா.தி. அவர்கள் விவரத்திற்காக முயன்று சென்று விலைக்குப் பெற்றார்கள். அந்நூல் வழங்கும் செய்தி தனிக் கட்டுரைக்கு உரியது. இனி தாஜ்மஹாலைப்பற்றிய விவரம் கட்டிட முகப்பிலேயே பொறிக்கப்பட்டுள்ளது. ஷாஜஹான் என்னும் அரசனின் மனைவி மும்தாஜ் மகால் ஞாபகச் சின்னம் இது. 22 வருடம்நடந்த வேலைப்பாடுடையது – என்று குறிக்கப்பட்ட செய்தியைப் படித்து தஞ்சை இராசராசேச்சுரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். அக்கோயிலும் 20 ஆண்டுகளாகக் கட்டப்பட்டது. எண்ணங்களின் பரிணாமவளர்ச்சியை எடைபோட்டவாறு சிறிய பெருந்தகையார் அவர்களுடன் அருட்சிந்தனை செய்து கொண்டு. வண்டியில் மீண்டும் ஏறினோம்.

எங்கள் பேருந்து வாரணாசிக்குச் சென்று கொண்டிருந்தா-லும் கயிலை மாமுனிவர்அவர்கள் கருணையுடன் வழியில் சத்தி பீடங்களில் ஒன்றாகிய மிருகாவதி பீடமந்திரில் வண்டியை நிறுத்தச்செய்து வழிபடவைத்தார்கள்.எங்கள் வண்டி விரைந்துசென்று வாரணாசியை அடைந்தது. இப் பயணங்களில் வழியில் கிட்டியதை உண்டு பயணத்தை முடித்தோம். காசி குமாரசாமி மடத்தில் கயிலை மாமுனிவர் சுவாமிகளின் ஆணைப்படி அறை ஒதுக்கீடுதந்து சிறந்தமுறையில் உணவு வழங்கச் செய்தார்கள்.

மாலையில் கங்கை நீராடி அநுட்டானத்தை முடித்து கேதார கட்டத்தில்உள்ள இறைவனை வணங்கி ஸ்ரீவிசுவநாதர் விசாலாட்சியைத் தரிசித்தோம். மறுநாள் திரிவேணி சங்கமம் சென்று அலகாபாத்தில்நீராடி மீண்டோம். பயணத்தின் களைப்புத்தீர வாரணாசியில் தொடர்ந்து மூன்றுநாளைக்குமேல் தங்கி வழிபாடு செய்யும்படி பயணத்திட்டம் அமைக்கப்பட்டதால், சிறிய பெருந்தகையாரின் நட்புக்குரிய பலர் நகரத்தார் திருமடத்தில் இருந்ததால் அவருடன் நானும் சென்று காசியில்உள்ள நகரத்ததார் விடுதியைக்கண்டு வந்தேன். அங்கு அதுசமயம் சிவத்திரு. தத்புருஷ தேசிகர் தமது அடியவர்குழுவுடன் வருகை தந்திருந்தார்கள். அவர்களையும் வணங்கி மகிழ்ந்து காசியில் வாங்க வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டோம்.

"சீலமேதகு பகீரதன் வேண்டலும் சிவன்தன்
கோலவார் சடைக் கங்கையம் புனலினைக் குன்றின்
மேலைநாள் விடவந்தென நந்திவீழ் விரிநீர்
பாலியாறெனும் பெயர்கொடு நடந்தது படியில்"

என்ற பாடலின் மூலமாக பாலியாறே கங்கை என அடித்துப் பேசினார். அடுத்தபடியாக காசியில் இறக்க முத்தி என்பதற்குரிய

"மாதவத்தால் காசிதனில் மாண்டவர்கள் தம்செவியில்
தீதகல விசுவேசன் செப்புவான் ஐந்தெழுத்தை
மாதவன் விசாலாட்சி மடிக்கிடத்தி வீசுவதால்
வேதனை எலாம் தீர்ந்து வென்றிடுவர் பின்பிறப்பை"

என்ற பாடலினையும் இசைத்து நின்று உருக்கமுடன் பாடினேன். அப்பொழுது கயிலை மாமுனிவர் அவர்கள் - துறக்கப்படாத உடலைத் துறந்து - என்ற அப்பர் பாடலின் பொருள் நுட்பத்தை விளக்குவதாக இப்பாடல் உள்ளது என்று ஒப்பீடுசெய்து ஸ்ரீகுமரகுருபரரின் காசிக்கலம்பகப்பாடலை மேற்கோள் காட்டி வழிப்படுத்தினார்கள்.


காசிக்குத் தமிழ் இலக்கியம் வழங்கிய குமரகுருபர சுவாமிகள் காசியில் இருந்து பாடிய காசிக்கலம்பகப் பாடலில்.

"புரவுபூண்டிந்திர திருவொடும் பொலிந்து
முடிவினும் முடியா முழுநலங் கொடுக்கும்
செந்நெறி வினவுதிராயின் இன்னிசைப்
பாத்தொடுத் தடுத்த பரஞ்சுடரை
நாந்தழும்பு இருக்க ஏத்துமின் நீரே"

என்ற வரிகளை நினைவு கூர்ந்து, தருமபுர ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் அருளிய காசித் தமிழ்ப் பாடல்களையும் பாராயணம் செய்யும்படி தமது குழுவினர்க்கு அறிவுறுத்தினார்கள் கயிலை மாமுனிவர் அவர்கள்.



ஸ்ரீகுமரகுருபர முனிவரர் வழியில் ராஜரிஷி என்ற பெயர் பெற்ற ஸ்ரீசடையப்பத் தம்பிரானால் கட்டப்பட்ட ஸ்ரீகுமாரசாமி மடத்தையும் அவர் பெயர் பொறித்த கல்வெட்டையும் பார்த்து அவர்களை நினைவு கூர்ந்து வணங்கினோம். அதுபோலவே அருள்பழுத்த காசியிலே அகிலேசன்றன் அடியரவநகரத்தார் காசியிலே உச்சிக்காலம் அர்த்தயாம பூஜையும் நாதஸ்வர இசையும் அமைந்துள்ள தர்மங்கள், வடநாட்டாராலும் போற்றப்படுகின்றன. ஸ்ரீவிசாலாட்சி கோயில் தமிழ்நாட்டு நகரத்தார் திருப்பணி கொண்டது என்பதைனையும் அதன் அமைப்புக்கொண்டும் அறிந்து கொண்டோம். சிறிய பெருந்தகையார் தமது ஸ்ரீவிசாலாட்சி ஆலை நாட்காட்டி அங்கு தொங்குவதையும் சுட்டிக்காட்ட வாரணாசி எங்களுக்கு மதுரையில் இருப்பது போலவே அமைந்தது என்று கூறி, மகிழ்ந்தோம். காசிமடம் ஸ்ரீசடையப்பத்தம்பிரான் தருமை ஆதீன வடக்குக் குருமூர்த்தத்தில் உள்ள ஸ்ரீசச்சிதானந்த விநாயகர் கோயிலைக் கட்டித் திருப்பணி செய்ததும், ஞானசம்பந்தம் இதழில் பதிவு செய்ததும் நினைவுகளும் அறச்செயலாகும். அதனை அடியேன் பதிவு செய்துள்ளேன்.




நேபாளம் - யாத்திரை நிறைவு

காசி, குமாரசாமிமடத்தில் கயிலைமாமுனிவர் ஸ்ரீகாசிவாசிசுவாமிகள் அவர்களின் வளாகத்தில் எங்கள் பயணக்குழுவினர் காலங்கள் தோறும் சென்று, கேதார கட்டம் கங்கை நீராடியும், ஸ்ரீகேதாரகௌரி தரிசனமும் ஸ்ரீவிஸ்வநாதர் விசாலாட்சி தரிசனமும் அவர்கள் வழிப்படுத்த அதன்படி வழிபாடுசெய்தோம். எங்களுடைய பயணம் இனி நேபாளம் ஸ்ரீபசுபதிநாதர் தரிசனத்தோடு நிறைவாக வேண்டும்.

நேபாளம் என்வாழ்க்கையில் தரிசனம்செய்ய விரும்பி, திருவருளை அவ்வப்பொழுதுவேண்டி திருநாவுக்கரசர் அருளிய பசுபதி திருவிருத்தத்தைப் பலமுறையும் பாராயணம் செய்ததன்பயனாக, கயிலை மாமுனிவர் அவர்களின் துணையோடு சிறிய பெருந்தகையாரின் அரவணைப்போடு செல்லும்வாய்ப்பைத் திருவருள்கூட்டிற்று. நேபாளம் செல்வதற்கு முதல் வகுப்பு நீதிமன்றத்தில் பாஸ்போர்ட்டுக்குப் பதிலாக - இந்தியக்குடிமகன் - என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் வாங்கப் பணித்தபடி மதுரையில் வாங்கிக் கொண்டேன். அது விமானப்பயணத்தில்வாங்கி மீண்டும் கொடுக்கப்பட்டு விட்டது.

நேபாளம் செல்லுதற்கு கயிலைமாமுனிவர் அவர்கள் விமானவழியாகச் செல்வதே எளிது என்று ஏற்பாடு செய்தபடி வாரணாசி விமானநிலையத்திலிருந்து நேபாளத்துக்கு அக்டோபர் 4,1990 மதியம் 12.00 மணிக்கு விமானத்தில் ஏறி இருபது நிமிடத்தில் நேபாளத்தின் தலைநகரான காட்மண்டு விமானநிலையத்தில்வந்து இறங்கினோம். ஏற்கனவே திருமடத்துக்குவேண்டிய பெரியவர் ஒருவர் சுவாமிகளை வரவேற்று தங்குமிடத்துக்குச் செல்ல வேண்டிய உதவிகளைச் செய்தார்.



விமானப் பயணம் எனக்குப் புது அனுபவம் என்றாலும் அது நம் நாட்டு சொகுசுப் பேருந்தில் செல்வது போலவே இருந்தது. விமானத்தில் ஏறுவதற்குமுன்பு சுங்கஇலாக்காவினர் எல்லோரையும் சோதனை போட்டு முடிக்கின்றனர். சந்தேகப்பட்டால் பெட்டி படுக்கைகளையும் திறந்து சோதனை செய்கின்றனர். எங்கள் குழுவில் வந்த திருச்செந்தூர் ஸ்ரீசுந்தரமையரை விமானநிலையத்தில் வந்த இலாகாவினர், "அவர்" அணிந்திருந்த சட்டை, கோட்டு அதிகப்படியாக இருந்ததால் அங்கேயெல்லாம், இரும்புச் சோதனைக்கருவி வைத்துச் சோதனை செய்தனர். குளிர் அதிகமென்று அவர் போட்டிருந்த பிளாஸ்டிக் சட்டைக் கோட்டில் உள்ள இரும்பு பித்தான்கள் சட்டைப் பையில் வைத்திருந்த வெற்றிலைப்பெட்டி இவற்றை இரும்புச் சோதனைக் கருவி காட்டிக் கொடுத்து, அனைவரையும் தாமதப்படுத்தி, நேரத்தைப் போக்கிவிட்டனர். அந்த நேரத்தில் கயிலை மாமுனிவர் அவர்கள் அதிகப்படியான ஆடையால் அனைவரையும் தாமதப்படுத்திவிட்டாய் – என்று நகைச்சுவைபட திருவாய்மலர்ந்து அவருடைய இயல்புக்குமாறான ஆடைஅணியைச் சுட்டிக்காட்டினார்கள் ஸ்ரீசுந்தரமையர் எங்கள் யாத்திரையில் அவ்வப்போது பேச்சாலும் நடையாலும் உடையாலும் நகைச்சுவைப்படுத்தி மகிழ்விப்பார். அதற்குக் கயிலைமாமுனிவர் அவர்களும் உட்பட்டவர்களாவார்கள், இப்பொழுது அவர்களால் நகைச்சுவைப்படுத்தப்பட்டு. நாங்கள் விணாகக்கழிந்த நேரத்தை மகிழ்ச்சியாக்கிக் கொண்டோம்.

நேபாளம் பெரியபுராணத்தில் சித்தரிக்கப்படுகிறது. திருமூலநாயனார் வரலாற்றைச் சிந்திக்கும் பொழுது சேக்கிழார் தமது பெரிய புராணத்தில்.

"மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ் பசுபதி நேபாளத்தைப் பணிந்தேத்தி"

என்று பண்டைக் காலத்திலேயே புண்ணியத் தலமாக பசுபதிநாதர் உறையும்தலமாகக் காட்டப்படுகிறது. இத்தலத்தைப் தருமபுர ஆதீனம் கயிலைக் குருமணி அவர்கள் தரிசித்துவந்த நேபாள யாத்திரைப் புத்தகத்தில் (1958) வெளி வந்துள்ளது.

அப்புத்தகத்தின்மூலமாக பசுபதி நாதருடைய பெருமை அருமையாக விளக்கப்படுகிறது. கேதார தரிசனம் செய்வோர் நேபாள பசுபதிநாதர் தரிசனம் செய்தால்தான் யாத்திரை முடிவடையும். இங்கேயிருக்கிற பசுபதிநாதர். இலிங்கத் திருமேனியாக இருந்தாலும் நான்கு திக்குகளுக்கு நான்கு முகங்களும் அதற்கும் மேலாக ஊர்த்துவ முகமொன்றும் ஆக ஐந்து முகங்கள் அமையபெற்றறு உள்ளது. ஐந்து முகங்கள் ஈசானம் தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம்; இறைவனின் ஐந்தொழில் அருளிப் பாட்டை உணர்த்துவன.

நேபாளமே ஒரு பெருங்கோயில், பொதுச்சமயம் அங்கே சைவம் பௌத்தமும் பாராட்டப்படுகிறது. அரசன் நல்ல சைவ அரசன். அவன் திருமுடியிலே பசுபதி நாதருடைய திருவடிகள் இருக்கின்றன. திருவடியே சரணம்; அதுவே பாதுகாப்பு; நான் பசுபதிநாதருடைய தூதுவனாக திருமாலுடைய அம்சமாக நாட்டைக் காக்கின்றேன். இங்குதான் சித்தார்த்தர் பிறந்த லும்பினித் தோட்டம்; அவரது நாடு கபில வாஸ்து முதலியன அமைந்துள்ளன. ஆதலின் நேபாளம் பௌத்தர்களுக்கும் பெரிய புண்ணிய பூமி. இந்துக்கள் பசுபதி நாதம், முக்தி நாதம், கயிலையங்கிரி மூன்றையும் வழிபட நேபாளம் வருகிறார்கள். கயிலை அடிவரை நேபாள எல்லை; நேபாளம் முழுவதும் எங்கும் ஆலயங்கள். அதனால்தான் நேபாளம் ஒரு பெரிய ஆலயம் என்று சொல்லப்படுகிறது. இந்தியாவிலேயே இந்து அரசரால் ஆளப்படும் ஒரேநாடு நேபாளநாடு. இவ்வரசர் இராமேசுவரம் கோவிலில் மூலஸ்தானம்வரை சென்று வணங்க பண்டைத்தமிழர்கள் அனுமதித்திருந்தார்கள் என்றால் நேபாள மன்னரின் பெருமையை என்ன என்று சொல்லுவது? இன்றும் அப்படியே!

இந்தியாவிற்குக் கங்கை நதிபோல நேபாளத்திற்கு பாக்மதிநதி புனிதமானது. இந்த நதிக்கு சிவகங்கை என்ற பெயருமுண்டு. முடிவில் கங்கைநதியோடு கலந்துவிடுகிறது. பாக்மதி நீரால்தான் பசுபதிநாதர் அபிஷேகிக்கப்படுகின்றார். இந்தநதி கோவிலுக்கு பக்கத்திலேயே ஓடிக்கொண்டிருக்கிறது சிறியபெருந்தகையாரோடு இவ்வாற்றில் நீராடி மாலை அனுட்டானத்தை முடித்துக்கொண்டு பசுபதி நாதரை நாங்கள்

முதலில் வழிபட்டோம். காவியுடை ருத்திராக்கமணிந்த அர்ச்சகர்கள் வேதகோஷங்கள் ஓதி வழிபாடு செய்விக்கின்றனர். இங்கு ருத்திரமந்திரம் சொல்லப்படுகின்றது. மறுநாள் காலை ருத்திராபிஷேகத்திற்கு கயிலைமாமுனிவர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வழிபாடு இரண்டரைமணிநேரம் நிகழ்வுற்றது. அடியேனும், சிறிய பெருந்தகையாரும் பசுபதி திருவிருத்தப்பாடல்களைப் பாராயணம் செய்து வழிபட்டோம். “எம்மை யாளும் பசுபதியே” என்று எங்கள் பாராயணத்தில்வந்த வார்த்தைகளைக்கேட்ட பலதேசத்து யாத்தீரீகர்களும் வந்தவார்த்தைகளைக்கேட்ட பலதேசத்து யாத்தீரீகர்களும் சேர்ந்து வழிபட்டு மொழி வேறுபாடின்றி மகிழ்ந்தனர். எங்கள் யாத்திரை மாலை வழிபாடாக முதலிலும் மறுநாள் காலை வழிபட்டு நிறைவாகவும் விமானத்தில் மீண்டும் வாரணாசிக்குப் புறப்பட திட்டமிடப்பட்டது. காலை யாத்திரைக்கு வேண்டிய விமானச்சீட்டுபெறும்பணிக்கு அடியேன் சிறிய பெருந்தகையாரொடுசென்று அவர்மூலமாக “கயிலை மாமுனிவர்” பணித்தபடி அனைவர்க்கும் விமானப்பயணம் உறுதியாயிற்று. இதுபற்றி கயிலைமாமுனிவர் அவர்கள் சிறிய பெருந்தகையாரைப் பாராட்டினார்கள். நேபாளநாடு தனிச் சுதந்திரம் உடையநாடு. இங்கு அரசாங்க விடுமுறை சனிக்கிழமைதான். எங்கு பார்த்தாலும் நந்தியும் திரிசூலமும் காணலாம். நேபாளநாட்டில் மின்விசிறிக்கு வேலையேயில்லை. காட்மண்டுநகர் ஓர் பெரிய பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. மதுரைப் பக்கத்துமலைகளைப்பார்த்துப் பழகிய எனக்குப் பள்ளத்தாக்கைச்சுற்றிஉள்ள மலைகள் சிறியனவாகக் காட்சியளித்தன. ஸ்தூபியைப் பாத்தோம். பாக்மதி ஆற்றின் கரையில் காட்மண்டு நகரும் மறுகரையில் லலிதப்பூரும் உள்ளன. அரண்மனையில் இப்பொழுது யாரும் இல்லை. காட்சிக் கூடமாக இருக்கிறது.

இங்கு நேபாளமொழி அதிகமாக வழங்கினாலும் இந்தி தெரிந்தால் எல்லோரிடமும் நன்றாகப் பேசிப்பழகலாம். ஆங்கிலம் தெரிந்து பயனில்லை. நேபாள நகரில் ஜப்பான், இங்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட

அனைத்துவித சாமான்களும் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. கடிகாரம், பெட்டி படுக்கைகள், எலெக்ட்ரானிக் பொருட்கள் சர்வ சாதாரணமாக விற்பனை செய்யப்படுகின்றன. உள்ளூரில் ஓடுகின்ற சிற்றுந்து பேருந்து முதலியன அனைத்தும் மேல்நாட்டு இறக்குமதிப் பொருட்களாகவே உள்ளன. எங்கள் குழுவினர் அவரவர்களுக்குப்பிடித்த பொருட்களை வாங்கிக்கொண்டு சுங்கத்தில் எப்படித்தப்பவேண்டுமென்பதையும் வணிகர்கள் கற்றுக் கொடுத்தனர். பொருள்கள் வாங்குமிடத்திலேயே எவ்வளவு அன்னியச் செலவாணி கட்டவேண்டும் என்பதையும் கணக்கிட்டுச்சொல்வது அதிசயமாய்இருந்தது. நேபாள உணவு விடுதியில் தென்னிந்திய உணவு வகைகளும் கிடைக்கின்றன. அங்கு நிர்வாகம்செய்கிறவரும் தென்னிந்தியராகக் காட்சியளிப்பது சென்னையில் உள்ளது போலவேஉள்ளது. முதல்நாள்இரவு குஹ்யேஸ்வரி ஆலயத்திற்கு கயிலைமாமுனிவர் அவர்கள் அழைத்துச் சென்று வழிபடவைத்தார்கள். நடுவில் கோரக்கர் ஆலயம் இருக்கிறது.

தமிழ்நாட்டில் எல்லோரும் சென்று திருமேனி தொட்டு வழிபாடு செய்வதுபோல பசுபதிநாதர், கோரக்கர் ஆலயங்களில் திருமேனி தீண்டுதல் முடியாது. குஹ்யேஸ்வரி அருகில் பைரவர் பிரதிஷ்டைஉள்ளது. பைரவர் அருவநிலையில் உள்ளார். ஸ்ரீசக்ரமேருப் பிரஸ்தாரமாக ஸ்ரீதேவி விளங்குகிறாள். அதன் நடுவே அஷ்டதள பத்மமாக மூர்த்தம் அமைக்கப்பட்டு இருக்கிறது இதுபோலவே நேபாளத்தில் வத்ஸலேஸ்வரி ஆலயமும் அம்பிகை வணக்கத்திற்காக தனியேஉள்ளது. அம்பிகை பசுபதிநாதர் ஆலயத்தில் தனிச் சந்நிதிகொண்டு இல்லை - என்பதை நாம்அறிய வேண்டும் பசுபதிநாதரை அலங்காரகாலத்தில் காண்பதைவிட அபிஷேகக்காலத்தில் கண்டால் பெருமானுடையகோலம் அழகாக உள்ளது என்று முன்னைய ஆதீனப்பெரியவர்கள். கருதிய கருத்து நேரில்பார்த்தபொழுது உறுதியாயிற்று. இவ்வாறு இரண்டுகால பூஜையைத் தரிசனம் செய்து கொண்டு பாக்மதிக்கரையை அடைந்தோம். அது "வாங்மதி" என்றும் அழைக்கப்படுகிறது. அக் கரையில் மயானம் இருப்பதைப்

பார்த்தோம். வாங்மதிநீரால் கழுவப்பட்ட ஆன்மா முக்தியடையும் என்றும் கூறுவதைக் கேட்டறிந்தேன்.

"சங்கரர்" – சென்ற இடத்திலெல்லாம் சைவமத நிர்த்தாரணம் செய்து அத்துவைத சித்தாந்தம் உலகில் பரவச் செய்தார். அவர் நேபாளத்திற்கு வந்து ஆகம வைதீக சம்பிரதாய பூஜாமுறைகளைத் தொடங்கிவைத்தபடி அது இன்றும் இருந்து வருவதாக மரபு வழியாகக் கூறப்படுகிறது. பசுபதி நாதருடைய திருமுன்பு. மண்டியிட்டு

"சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றார்பிணி தீர்த்தருளாய்"

என்ற திருமுறை விண்ணப்பம் செய்து வழிபாட்டை நிறைவு செய்தோம். செய்த பொழுது. இங்கு சிவராத்திரி மிகச் சிறப்பாக அமைந்திருக்குமென்றுகூறப்பட்டது; சிவராத்திரி வழிபாடு திருவருளால் கூட்டுவதாக என்று வேண்டினேன்.

நேபாளத்தில் உருத்திராட்சைக் கடைகள் நமது நாட்டு வெற்றிலைப்பாக்குக் கடைபோல வரிசையாக உள்ளன. பெரும்பாலும் அனைவரும் கறுப்புக் கயிற்றில் தவறாமல் கழுத்தில் உருத்திராக்கம் பூண்டுள்ளனர். அதுபோலவே சாளக்கிராமமும் விலைக்குப்பெறலாம். சாளக்கிராமம் வைத்து பூஜைசெய்வது வடநாட்டுவழக்கம். நாங்கள் சென்றபோது கயிலைமாமுனிவர் அவர்கள் உருத்திராட்சம் முதலியன வாரணாசியிலேயே வாங்கிக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள் என்றாலும், நேபாளத்தில் உருட்திராட்சம் வாங்கமுடியவில்லையே என்ற ஏக்கத்தைப் போக்கும்படியாக கயிலை மாமுனிவர் அவர்கள், "குழுவினர்" அனைவருக்கும் தமது திருக்கரத்தால் ஐந்துமுகப் பெரிய உருத்திராட்ச மாலைசூட்டி ஆசீர்வாதம் செய்தார்கள்.

நேபாளயாத்திரை ஒருவாறாக நிறைவுற்றது மீண்டும் வாரணாசிவந்து ஸ்ரீகுமாரசுவாமிமடத்தில் தொடர்பயண நினைவுகளோடு காசிநாதரை வழிபட்டும், சிதம்பரம் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளோடும், குடந்தை காங்கேயம்பிள்ளை, சிதம்பரம் வேதரத்தினம் முதலியவரோடும், மடத்தில் புராண இலக்கிய சிந்தனை செய்து

பொழுது கழித்தோம். எங்கள் யாத்திரையில் செம்பொனார் கோயில் இரத்தினசாமிஉடையார் அவர் துணைவியார் திருமதி சகுந்தலா அம்மையார் ஆகிய இருவரும் தருமபுர ஆதீனக் குருவருள் மிகவும் போற்றுவதோடு, அம்மையாரவர்கள் ஆதீனத்தமிழ்க் கல்லூரியிலும் பயின்றவராதலின் இலக்கியச் சிந்தனையில் தமது பங்காகப் பாடி மகிழ்வித்தார்கள்.

இவ்வாறு எங்கள் தொடர்யாத்திரை சிறந்தசமய அனுபவங்களைத் தருவதாக அமைந்தது.

"பொல்லாத பாவத்தை விட்டு சிவன் கழற் கீழ்ப்
புகுங்காலம் புணர்ந்தது எற்கு
எல்லோரும் வாருமெனக் கருணையினா லழைத்திடல்
யாத்திரை" -

என்று திருவாசக உண்மை கூறுவதுபோல சிவபெருமானை சிந்திக்கும்யாத்திரையாக - அவரைத்தேடிவழிபடும் யாத்திரையாக முற்றுப்பெற்றது.

"குருமணியைக் குறுக வல்வினைகள் கூடாவே"

என்று திருவிசைப்பா ஆசிரியர் கூறுவதை, நேரடியாக கயிலை மாமுனிவர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த எங்கள் யாத்திரையாதொரு இடரின்றி நிறைவுற்றது. யாத்திரைக் குழுவினர் அனைவரும் நன்றி பாராட்டும் முகமாக கயிலை மாமுனிவர் அவர்களுக்கு வழிபாடுசெய்து பொன்னாடை போர்த்திச் சிறப்புச்செய்தார்கள். இப்பணியில்சிறிய பெருந்தகையார் நா.தியாகராாசன்செட்டியார் முன்னின்று பொன்னாடைபோர்த்தி கயிலைமாமுனிவரிடம் தமது அன்பை வெளிப்படுத்திக்கொண்டார்கள். எங்கள் யாத்திரை மீண்டும் சென்னைநோக்கி நிகழ்ந்தது. அவரவர்களுடைய ஊர்களுக்குப் பிரிந்துசென்றோம். சிலநாள் கழித்து சிறிய பெருந்தகையாரும் அடியேனும் யாத்திரை நிறைவாக மீண்டும் தருமபுர ஆதீனம் சென்று குரு தரிசனம் செய்து வணங்கி வாழ்த்தும் பெற்றோம்.

முற்றும்



ஸ்ரீ ராகவேந்திரா ஆப்செட் பிரிண்டர்ஸ்
72, தானப்பமுதலி தெரு (மிட்லண்ட் ஹோட்டல் அருகில்) மதுரை-625 001
✆ 0452-4217991 99422 68003
e-mail id : ragavapress@gmail.com


PRINTED BOOKPOST
To
DHARMAPURAM ADHINA
Sri Gurugnana Sambandar
NORTH MASI STREET
MADURAI - 625 001
INDIA
100
BAL GANGADHAR TILAK